بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ المَسِیۡحِ المَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

இதழ் 34

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

முஹர்ரம் 26 - ஹிஜ்ரி கமரி 1444 ★ ஸஹூர் 25 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 25 ஆகஸ்ட் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَاِذَا صُرِفَتۡ اَبۡصَارُهُمۡ

تِلۡقَآءَ اَصۡحٰبِ النَّارِ قَالُوۡا

رَبَّنَا لَا تَجۡعَلۡنَا مَعَ الۡقَوۡمِ الظّٰلِمِيۡنَ

**பொருள் :**

(சுவர்க்கத்திற்குரிய) அவர்களின் பார்வைகள் நரகத்திற்குரியவர்களின் பக்கம் திருப்பப்படும்போது, எங்கள் இறைவா! எங்களை அநீதி இழைக்கும் சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக என்று அவர்கள் கூறுவர்.

(அல் அஃராஃப்:48)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும். அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஆன்மாவிற்கு இன்பம் எந்த விஷயத்தில் உள்ளது? என்று உலகம் அறிந்திருக்க வேண்டுமே! அது திருக்குர்ஆனில் மட்டுமே இருக்கிறது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நான் பார்க்கின்றேன். தற்போதைய காலத்தில் உலகத்தின் கவனம் உலக அறிவுகளின் பக்கம் மட்டுமே மிகவும் அதிகமாக இருக்கின்றது. மேற்கத்திய வெளிச்சம் உலகை தமது புதுப் புது கண்டுபிடிப்புகளாலும், தயாரிப்புகளாலும் ஆச்சரியத்தில் உறையச் செய்துள்ளது. முஸ்லிம்களும் தமது வெற்றி மற்றும் முன்னேற்றத்திற்கு ஏதாவது வழியை சிந்தித்துள்ளார்கள் என்றால், துரதிஷ்டவசமாக அவர்கள் மேற்க்கில் வசிப்பவர்களை தமது இமாமாக ஆக்கிக் கொள்வதையே சிந்தித்துள்ளனர். பழைய ஃபேஷனின் முஸ்லிம்கள் என்றழைக்கப்படுகின்ற மற்றும் தங்களைத் தாங்களே மார்க்கத்தின் உதவியாளர்களாக கருதிக் கொள்கின்ற முஸ்லிம்களின் புதிய வெளிச்சத்திற்கான நிலை இதுவே ஆகும்.

அவர்கள் முழு வாழ்நாளிலும் பெற்றதன் சாரம்சம், சுருக்கம் என்னவென்றால் அவர்கள் இலக்கணச் சண்டைகளிலும், தர்க்கங்களிலும் சிக்கியுள்ளனர். الضَّآلِّيۡنَ என்ற சொல்லின் உச்சரிப்பின் தர்க்கத்தில் மரணித்து கிடக்கின்றனர். திருக்குர்ஆனின் பக்கம் முற்றிலும் கவனமே இல்லை. மனதை சுத்தப்படுத்துவதன் பக்கம் அவர்கள் கவனம் செலுத்தாதபோது, அவர்களுக்கு எப்படி கவனம் இருக்க முடியும்? ஆயினும், மனதை சுத்தம் செய்வதற்கான வாதத்தை செய்யக்கூடிய ஒருக் கூட்டமும் உள்ளது. அது சூஃபிகளின் கூட்டம் ஆகும். ஆனால், அந்த மக்கள் திருக்குர்ஆனை விட்டுவிட்டனர். மேலும், தமக்கான சொந்த வழிமுறையை உருவாக்கிக் கொண்டனர். ஒருவர் தனிமையை மேற்கொள்கின்றார். ஒருவர் اِلَّا اللّٰہ முழக்கமிடுகிறார். ஒருவர், எதிர்மறை உறுதிமொழி, ஓதி ஊதுதல் போன்றவற்றில் மூழ்கியுள்ளார். சுருக்கமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்தும் அந்த நடைமுறைகள் நிரூபணம் ஆகவில்லை. மேலும் அவை

இதன் தொடர்ச்சி - 10ஆம் பக்கம்...

## உடன்படிக்கைகளை பேணுதல் என்பது சமுதாய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு மிகவும் அவசியமாகும். நம்பிக்கை நிலைபெற்றிருக்கவும், ஒருவர் மற்றவருக்கு திருப்தியுடனும், ஆர்வத்துடனும் உதவி செய்வதற்காக தயாராக இருப்பதற்கும், சமுதாயம் முன்னேற்றம் அடைவதற்காகவும் என்ன ஆனாலும் தமது வாக்குறுதிகளை முழுமை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

وَلَا تَكُوۡنُوۡا كَالَّتِىۡ نَقَضَتۡ غَزۡلَهَا مِنۡۢ

بَعۡدِ قُوَّةٍ اَنۡكَاثًا ؕ تَتَّخِذُوۡنَ اَيۡمَانَكُمۡ دَخَلًاۢ بَيۡنَكُمۡ

اَنۡ تَكُوۡنَ اُمَّةٌ هِىَ اَرۡبٰى مِنۡ اُمَّةٍ ؕ اِنَّمَا يَبۡلُوۡكُمُ اللّٰهُ

بِهٖ ؕ وَلَيُبَيِّنَنَّ لَـكُمۡ يَوۡمَ الۡقِيٰمَةِ مَا كُنۡتُمۡ فِيۡهِ تَخۡتَلِفُوۡنَ ○

(அந்நஹ்ல்:93)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள் :

ஒரு புதிய கருத்தின் தொடர்ச்சியாக இந்த வசனத்தை குறிப்பிட முடியும். மேலும் முந்தைய வசனத்தின் கருத்தின் தொடர்ச்சியாகவும் குறிப்பிட முடியும். முந்தைய வசனத்தின் கருத்தின் தொடர்ச்சியாகவே இந்த வசனத்தைக் குறிப்பிட்டால் அதன் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, தங்களுக்கிடையிலான விவகாரங்களை முழுமையாக நிறைவேற்றுங்கள். நீங்கள் அந்த உடன்படிக்கைகளை முறித்துவிட்டால், இறைவன் உருவாக்கியுள்ள உங்களுடைய வலிமையான ஜமாத் அழிந்துவிடும். மேலும், பரஸ்பர நம்பிக்கை நீங்கிக் கொண்டே செல்லும்.

உடன்படிக்கைகளை பேணுதல் என்பது சமுதாய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு மிகவும் அவசியமாகும். ஏனென்றால், ஜமாஅத் நிலைபெறுவது என்பது ஒருவர் மற்றவருடனான அழகிய நடைமுறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மக்கள் உடன்படிக்கைகளை பேணிவரும் வரை அழகிய நடைமுறை

இதன் தொடர்ச்சி - 10ஆம் பக்கம்...

## நபிமொழி

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மது வியாபாரத்தை ஹராம் ஆக்கியுள்ளார்கள்:**

**(2083)** ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதன் செல்வத்தை பெறும்போது அது ஹலாலா அல்லது ஹராமா? என்று பொருட்படுத்தாத ஒரு காலம் மக்களிடம் வரும்.

(2084) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சூரா பக்ராவின் கடைசி வசனங்கள் இறங்கியபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை பள்ளிவாயிலில் ஓதிக் காட்டினார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் மதுவை விற்பனை செய்வதையும் ஹராம் ஆக்கிவிட்டார்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

**ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களின் ஈமானும், உறுதிப்பாடும்:**

**(2091)** ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அறியாமைக் காலத்தில் கொல்லனாக பணி செய்து வந்தேன். ஆஸ் பின் வாயில் என்பன் எனக்கு கடன் தர வேண்டியிருந்தது. அந்த கடனை வாங்குவதற்காக நான் அவனிடம் சென்றேன்.

அப்போது அவன், நீ முஹம்மது (ஸல்) அவர்களை நிராகரித்துவிடாத வரை நான் உமது கடனைத் திரும்பித் தரமாட்டேன் என்று கூறினான். அதற்கு, அல்லாஹ் உன்னை மரணிக்கச் செய்து, மீண்டும் உயிர்கொடுத்து விட்டாலும் நான் நிராகரிக்க மாட்டேன் என்று நான் கூறினேன்.

நல்லது. நான் மரணித்து மீண்டும் உயிர்பிக்கப்படும் வரை என்னை விட்டுவிடு. அப்போது, எனக்கு கிடைக்கும் செல்வம், பிள்ளைகள் ஆகியவற்றிலிருந்து (மறுமையில்) கிடைக்கும் போது, நான் (அவற்றிலிருந்து) உமது கடனை செலுத்திவிடுவேன் என்று அவன் கூறினான்.

(புகாரி, தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

ஸாதுஸ் ஸலாஸில் போரில் முஸ்லிம்களின் வெற்றிக்கு ஒரு மிகப் பெரிய காரணம் ஈராக்கின் விவசாயிகள் தொடர்பாக வடிவமைத்திருந்த ஹஸ்ரத் அபூபக்ர் [ரலி] அவர்களின் பாலிஸியாகும். அதனை ஹஸ்ரத் காலித் [ரலி] அவர்கள் கடுமையாக அமல்படுத்தினார்கள். அந்த பாலிஸியின் கீழ் அன்னார் [ரலி] விவசாயிகளுக்கு எந்த தொல்லையும் கொடுக்கவில்லை. அவர்கள் எங்கெல்லாம் குடியேறி இருந்தார்களோ அங்கேயே வசிப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். ஜிஸ்யா வரியாக சாதாரணத் தொகையைத் தவிர அவர்களிடமிருந்து வேறு எந்த ஒரு தொகையோ அல்லது வரியோ வசூல் செய்யவில்லை.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 ஜுலை 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **22ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈரானியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று எடுத்துரைக்கப்படும் என்று நான் கடந்த குத்பாவில் கூறியிருந்தேன். அந்த வகையில் ஒரு போர் நடைபெற்றது. அதனை ஸாதுஸ் ஸலாஸில் அல்லது காஸிமா போர் என்று கூறுவார்கள். இந்தப் போர் ஹிஜ்ரி 12-ல் முஹர்ரம் மாதத்தில் நடைபெற்றது. இந்தப் போர், ஸாதுஸ் ஸலாஸில், காஸிமாப் போர், ஹஃபீர் போர் என்ற மூன்று பெயர்களால் அறியப்படுகிறது. இந்தப் போர் ஸாதுஸ் ஸலாஸில் அதாவது சங்கிலிகளைக் கொண்டப் போர் என்று இதனால் கூறப்படுகிறது. அதாவது, அரபியில் ஸல்ஸலா என்பதற்கு சங்கிலி என்று பொருள். அதன் பன்மை ஸாலாஸில் ஆகும். ஏனென்றால், இந்தப் போரில் எந்த நபரும் போரிலிருந்து ஓடிவிடக் கூடாது என்பதற்காக ஈரானிய படையினர், தங்களைத் தாங்களே ஒருவர் மற்றவருடன் சங்கிலிகளால் கட்டிக் கொண்டனர். ஸாதுஸ் ஸலாஸில் என்ற போரின் இந்த அறிவிப்பை சில வரலாற்றாசிரியர்கள் ஒப்புக் கொள்வதில்லை. முஸ்லிம்கள் மற்றும் ஈரானியர்களுக்கு இடையிலான இந்தப் போர் காஸிமா என்ற இடத்திற்கு அருகில் நடைபெற்றது. இதன் காரணமாகவும் காஸிமாப் போர் என்ற பெயராலும் அதனை அழைக்கின்றனர். காஸிமா என்பது பஸராவிலிருந்து பஹ்ரைன் செல்லும் வழியில் ஸய்ஃபுல் பஹ்ர் பகுதியில் அமைந்துள்ள ஓர் ஊராகும். (ஆசிரியர் உமர் அபூன் நஸர் அவர்களின் நூல்-சீரத் ஸய்யிதுனா சித்தீக்கே அக்பர் (ரலி), பக்கம் 664), (அல் காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 239, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2003) (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல் அபூபக்ர் சித்தீக்கே அக்பர் (ரலி), மொழிபெயர்ப்பு ஷேக் முஹம்மது அஹ்மது பானிபத்தீ, பக்கம் 272, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர் லாஹூர் 2004) (முஃஜமுல் பல்தான் தொகுதி 4, பக்கம் 488)

ஹஃபீர் என்ற பகுதியில் (இந்தப் போர்) நடைபெற்றதன் காரணமாக அந்தப் போர் ஹஃபீர் போர் என்றும் கூறப்படுகிறது.

(அஸ் ஸித்தீக் (ரலி) பக்கம், 127- நூலாசிரியர் பேராசிரியர் அலி முஹ்ஸின் சித்தீகி)

ஹுர்முஸ், ஈரானியர்களின் சார்பாக அந்தப் பகுதியின் ஆட்சியாளனாக இருந்தான். பரம்பரை, பாரம்பரியம், கண்ணியம், போன்றவற்றில் பெரும்பாலான ஈரானிய செல்வந்தர்களை விட அவன் மிகைத்தவனாக இருந்தான் என்று ஏற்கனவே கடந்த குத்பாவில் கூறப்பட்டுவிட்டது. செல்வாக்கு மிக்க ஈரானியர்களின் பழக்கம் என்னவாக இருந்தது என்றால், அவர்கள் சாதாரண தொப்பிகளுக்குப் பகரமாக, விலை உயர்ந்த தொப்பிகளை அணிந்து வந்தார்கள். குடும்பம், பாரம்பரியம், மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த நபர் எந்த அந்தஸ்தில் இருந்தாரோ அவர் அதற்கேற்ப விலை உயர்ந்த தொப்பிகளை அணிந்து வந்தார். மிகவும் விலை உயர்ந்த தொப்பி ஒரு லட்சம் தர்ஹம் கொண்டதாக இருந்தது என்று கூறப்படுகிறது. அதனை கண்ணியம் மற்றும் செல்வாக்கில் உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள் மட்டுமே அணிய முடிந்திருந்தது. ஹுர்முஸுடைய தொப்பியின் விலை ஒரு லட்சம் தர்ஹமாக இருந்தது என்பதிலிருந்தே அவனுடைய உயர் அந்தஸ்தை அனுமானித்துக் கொள்ள முடியும்.

அவனுடைய செல்வாக்கு ஈரானியர்களின் பார்வையில் ஒப்புக் கொள்ளப்பட்டதாக இருந்தது. ஆயினும், ஈராக்கின் எல்லைப்புறப் பகுதிகளில் வசித்து வந்த அரேபியர்களில் அவன் வெறுப்பிற்குரியவனாக பார்க்கப்பட்டு வந்தான். ஏனெனில் அவன் அந்த அரேபியர்களிடம், எல்லைப்புற அமீர்மார்கள் மூலம் மிகவும் கடுமையாகவும், அநீதியாகவும் நடந்து வந்தான். அரேபியர்களின் வெறுப்பு எந்த எல்லையை அடைந்திருந்தது என்றால், முஸ்லிம்கள் அல்லாத அரேபியர்கள் ஒரு நபரின் தீமையைக் குறிப்பிடும்போது ஹுர்முஸ் பெயரை உதாரணமாகக் குறிப்பிட்டு வந்தனர். இன்ன நபர் ஹுர்முஸை விடவும் மிக மோசமானவன் என்று அவர்கள் கூறிவந்தனர். இன்ன நபர் ஹுர்முஸை விடவும் மிகவும் தீய இயல்பு படைத்தவனும், மிக மோசமானவனும் ஆவான். இன்ன நபர் ஹுர்முஸை விடவும் மிகவும் அதிக நன்றிகெட்டவன் ஆவான் என்றும் கூறிவந்தனர். மேலும் இதன் காரணமாக, ஹுர்முஸிற்கு அரேபியர்களின் தொடர் தாக்குதல்களையும், மோதல்களையும் எதிர் கொள்ள வேண்டி வந்தது. மற்றொரு பக்கம், இந்தியப் பெருங்கடல் கொள்ளையர்களுடனும் ஹுர்முஸிற்கு மோதல்கள் நிகழ்ந்து வந்தன. (ஹேகல் அவர்களின் நூல், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், பக்கம்-269,270)

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், யமாமாவிலிருந்து புறப்படுவதற்கு முன் ஹுர்முஸிற்கு கடிதம் எழுதியிருந்தார்கள். அன்னார் தமது கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தார்கள்.

அம்மா பஃது! கட்டுப்படுதலை மேற்கொள்ளுங்கள். நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள் அல்லது உங்களுக்கும், உங்களது சமுதாயத்திற்கும் பாதுகாப்பிற்கான உத்திரவாதத்தை பெற்றுக் கொள்வீர்கள். மேலும், ஜிஸ்யா வரி செலுத்துவதற்கு ஒப்புக் கொள்ளுங்கள். இல்லையென்றால், உங்களை நீங்களே

குற்றம் சுமத்துவதைத் தவிர வேறு எவர் மீது குற்றம் சுமத்த முடியாது.

நீங்கள் வாழ்க்கையை நேசிப்பதைப் போன்று மரணத்தை நேசிக்கக் கூடிய சமுதாயத்தை உங்களுக்கெதிராக போரிட நான் அழைத்து வந்துள்ளேன்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 309, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கடிதம் ஹுர்முஸிற்கு கிடைத்தபோது, அவன் கிஸ்ரா பேரரசருக்கு தகவல் கொடுத்தான். மேலும் தமது படையை ஒன்றுகூட்டினான். மேலும், ஓர் அதிவிரைவு படையை உடனே அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை எதிர்கொள்ள காஸிமா சென்றடைந்தான். மேலும், தனது குதிரைகளில் முன்னேறிச் சென்றான். ஆனால், அவனால் வழிப்பாதையில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை அடைய முடியவில்லை. முஸ்லிம்களின் படை ஹஃபீர் என்ற இடத்தில் ஒன்று கூடிவருகிறது என்று அவனுக்கு தகவல் கிடைத்தது. எனவே திரும்பி அவன் ஹுஃபைருக்கு புறப்பட்டான். ஹுஃபைர் என்ற இடம் பஸராவிலிருந்து மக்காவிற்கு செல்லும் வழியில் முதல் பகுதியில் உள்ளது. அங்கு சென்றடைந்தவுடன் தமது படைகளை அணிவகுக்கச் செய்தான். ஹுர்முஸ் தமது வலமும், இடமும் இரண்டு சகோதரர்களை நியமித்தான். அவர்களில் ஒருவனின் பெயர் குபாஸ் மற்றொருவனின் பெயர் அனூ ஷஜான் ஆகும். ஈரானியர்கள் தங்களைத் தாங்களே சங்கிலிகளால் கட்டிக் கொண்டனர். இந்த அறிவிப்பில் இவ்வளவுதான் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறும் கூறப்படுகிறது: அதாவது, எந்த மக்களின் கருத்து அதற்கு எதிராக இருந்ததோ, அவர்கள் அந்தக் காட்சியைக் கண்டனர். மேலும், அவர்கள் கூறினர்: அதாவது, நீங்கள் எதிரிகளுக்காக உங்களை நீங்களே சங்கிலிகளால் கட்டிக் கொண்டுள்ளீர்கள். இவ்வாறு செய்யாதீர்கள். இது தீய சகுனம் ஆகும்.

அதற்கு, அந்த மக்கள் இவ்வாறு பதிலளித்தனர்: அதாவது, சங்கிலிகளால் அவ்வாறு கட்டிக் கொள்வதற்கு ஆதரவாக இருந்த மக்கள் கூறினர். நீங்கள் ஓட்டம் பிடித்துவிடுவீர்கள் என உங்களைக் குறித்து எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று கூறினர். ஹுர்முஸ் ஹுஃபைர் வந்தடைந்துவிட்ட தகவல் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அன்னார் (ரலி) அவர்கள் தமது படையை அழைத்துக் கொண்டு காஸிமாவை நோக்கித் திரும்பிவிட்டார்கள்.

ஹுர்முஸிற்கு அது தெரிய வந்தபோது, அவன் உடனடியாக காஸிமாவை நோக்கி புறப்பட்டுவிட்டான். மேலும் அங்கு முகாமிட்டுவிட்டான். ஹுர்முஸும், அவனது படையினரும் அணிவகுத்து நின்றனர். மேலும் (குடி)தண்ணீரின் மீது அவர்களின் கட்டுப்பாடு இருந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் வந்தபோது, அன்னாருக்கு தண்ணீர் இல்லாத இடத்தில் முகாமிட நேரிட்டது. அன்னார் (ரலி) அவர்களிடம் மக்கள் புகார் செய்தனர். அப்போது அன்னார் (ரலி) அவர்களின் அறிவிப்பாளர் இவ்வாறு அறிவிப்பு செய்தார் :

அனைத்து மக்களும் கீழே இறங்குங்கள். மேலும், பொருட்களை கீழே இறக்குங்கள். மேலும், எதிரிகளுடன் தண்ணீருக்காக சண்டையிடுங்கள். ஏனென்றால், இறைவன் மீது ஆணையாக! இந்த இரண்டு பிரிவினர்களிலும் அதிக உறுதிப்பாட்டுடன் நிலைத்திருக்கும் பிரிவிடமும், இரண்டு பிரிவினர்களில் அதிக கண்ணியம் உடையவரிடமும் மட்டுமே தண்ணீரின் மீதான ஆதிக்கம் இருக்க வேண்டும்.

அதன்படி பொருட்கள் கீழே இறக்கப்பட்டன. சவாரிகள் அதன் இடத்திலேயே நிறுத்தப்பட்டன. படையினர் நடந்து சென்று முன்னேறினார்கள். மேலும், எதிரியின் மீது தாக்குதல் நடத்தினர். இரு தரப்பிலும் சண்டை ஆரம்பமானது. அப்போது, அல்லாஹ் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினான். முஸ்லிம்களின் ஸஃப்களுக்குப் பின்னால் மழை பொழிந்தது. அதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஆற்றல் கிடைத்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு எதிராக ஹுர்முஸ் ஒரு சதித் திட்டம் தீட்டினான். அவன் தனது பாதுகாப்புப் படையினரிடம் இவ்வாறு கூறினான். அதாவது, நான் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை போருக்கு அழைப்பேன். நான் அவர்களை சண்டையில் மும்முரமாக ஆக்கிவிடுவேன். அப்போது, நீங்கள் திடீரென மறைந்து இருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று கூறினான்.

அதன் பிறகு, ஹுர்முஸ் மைதானத்தில் இறங்கினான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது குதிரையிலிருந்து கீழே இறங்கினார்கள். ஹுர்முஸும் தனது குதிரையிலிருந்து கீழே இறங்கினான். அவன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை சண்டையிட அழைத்தான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவனை நோக்கி நடந்து சென்றார்கள். இருவருக்கிடையிலும் சண்டை நடந்தது. இருவர் புறமிருந்தும் தாக்குதல் நடந்தது.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹுர்முஸை பிடித்துவிட்டார்கள். அப்போது, ஹுர்முஸின் பாதுகாப்புப் படையினர் நம்பிக்கை துரோகம் செய்தவாறு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டனர். மேலும் அன்னாரை சுற்றி வளைத்துவிட்டனர்.

இவ்வாறு ஒவ்வொருவராக சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது பின்னர் மற்றவர்கள் தாக்குதல் நடத்தமாட்டார்கள். ஆனால், அவனுடைய படை அன்னார் (ரலி) மீது தாக்குதல் நடத்தி விட்டது. அதன் பிறகும் கூட, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹுர்முஸ் கதையை முடித்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் கஃகஃஆ பின் அமர் (ரலி) அவர்கள் ஈரானியர்களின் இந்த துரோகத்தை கண்ட உடனேயே ஹுர்முஸின் பாதுகாப்புப் படையின் மீது தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். மேலும் அவர்களை சுற்றி வளைத்து, மரணத்தின் குழியில் இறக்கிவிட்டார்கள். முஸ்லிம்கள் இரவின் இருளில் ஈரானியர்களை விரட்டிச் சென்றார்கள். மேலும் இன்று பஸரா குடியேற்றம் இருக்கும் இடமான ஃபுராத் நதியின் பெரிய பாலம் வரை அவர்களை கொன்று குவித்து சென்றுவிட்டார்கள். போரின் முடிவில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் போர்செல்வங்களை ஒன்று திரட்டினார்கள். அதில் ஓர் ஒட்டகத்தின் எடைக்கு சமமான சங்கிலிகளும் இருந்தன. அவை ஓராயிரம் தல் எடை கொண்டதாக இருந்தது. அதாவது, சங்கிலிகள் சுமார் 375 கிலோ எடை கொண்டதாக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பப்பட்ட போர் செல்வங்களில் ஹுர்முஸ் உடைய ஒரு தொப்பியும் இருந்தது. அதன் விலை ஒரு லட்சம் திர்ஹம் ஆக இருந்தது. மேலும் அதில் ஆபரணங்களும் இருந்தன. அந்த தொப்பியை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழங்கிவிட்டார்கள். வெற்றியின் நற்செய்தி, போர் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கு, மேலும் ஒரு யானை ஆகியவற்றை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், எல்லா புறமும் இஸ்லாமிய படையின் வெற்றியின் நற்செய்தியை அறிவிப்பு செய்துவிட்டார்கள்.

கும்ஸ் எனும் போர் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கையும், யானையையும் எடுத்துக் கொண்டு ஸிர்ரா பின் குலைப் மதீனா சென்றடைந்தார். அதற்கு முன்பு வரை மதீனாவாசிகளுக்கு ஒருபோதும் யானையை பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. மதீனா வாசிகள் என்ன? அரேபியாவின் எந்த ஒரு குடிமகனும் அப்ரஹாவின் யானைகளைத் தவிர அன்று வரை யானையின் வடிவத்தை கண்டிருக்கவில்லை. மக்கள் பார்க்கவேண்டும் என்பதற்காக அதனை முழு நகரத்திலும் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டப் போது, வயதான

பெண்மணிகள் அதனை பார்த்துவிட்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தனர். மேலும், நாங்கள் பார்க்கின்ற இந்த விலங்கு இறைவனின் படைப்புகளைச் சேர்ந்ததா? என்று அவர்கள் கேட்டனர். அது ஏதோ செயற்கையான பொருள் என்று அவர்கள் புரிந்திருந்தனர். அந்த யானையை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸிர்ராவுடன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள். (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 309-310, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012) (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் நூல்,ஸய்யிதுனா அபூபக்ர் ஸித்தீக் (ரலி) பக்கம், 404-405)

இந்தப் போரில் முஸ்லிம்களின் வெற்றிக்கு ஒரு மிகப் பெரிய காரணம் ஈராக்கின் விவசாயிகள் தொடர்பாக வடிவமைத்திருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பாலிஸியாகும். அதனை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கடுமையாக அமல்படுத்தினார்கள். அந்த பாலிஸியின் கீழ் அன்னார் (ரலி) விவசாயிகளுக்கு எந்த தொல்லையும் கொடுக்கவில்லை. அவர்கள் எங்கெல்லாம் குடியேறி இருந்தார்களோ அங்கேயே வசிப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். ஜிஸ்யா வரியாக சாதாரணத் தொகையைத் தவிர அவர்களிடமிருந்து வேறு எந்த ஒரு தொகையோ அல்லது வரியோ வசூல் செய்யவில்லை. (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) பக்கம்,272, மொழிபெயர்ப்பாளர் ஷேக் முஹம்மது அஹ்மது பானிபதீ இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர் லாஹூர் 2004)

ஸாதுஸ் ஸலாஸில் போரில் பங்கு பெறக் கூடிய சவாரிகளுக்கு ஓராயிரம் தர்ஹம் பங்கு கொடுக்கப்பட்டது. மேலும், நடந்து வந்தவர்களுக்கு அதில் ஒரு பாதி வழங்கப்பட்டது. (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம்311, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

காஸிமாப் போர் தொலை தூர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக நிரூபணமானது.

அந்தப் போரானது முஸ்லிம்களின் கண்களைத் திறந்தது. நீண்ட காலமாக வலிமையில் புகழப்பட்டு வந்த ஈரானியர்கள் முழுபலம் பெற்றிருந்த போதிலும், தங்களது சாதாரண படைக்கு முன்னால் நிலை நிற்க முடியவில்லை என்பதை முஸ்லிம்கள் கண்டு கொண்டனர். மேலும், அந்தப் போரில் முஸ்லிம்களின் கைகளில் கிடைத்த போர் செல்வத்தை அவர்களால் கற்பனை கூட செய்திருக்க முடியாது. (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) பக்கம், 272, மொழிபெயர்ப்பாளர் ஷேக் முஹம்மது அஹ்மது பானிபதீ இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர் லாஹூர் 2004)

அடுத்து, ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு நடைபெற்ற உபல்லாஃப் போர் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. பாரசீக வளைகுடாவின் ஓர் எல்லைப் பகுதியான ஈராக்கில், உபல்லாஃவிலிருந்து போரைத் துவங்குங்கள் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். ஈராக்கிலிருந்து இந்தியா மற்றும் சிந்து பகுதிக்கு வந்த வணிகக் குழுக்கள் முதன் முதலில் உபல்லாஃவில் தங்கி வந்தார்கள். உபல்லாஃ வெற்றிக் குறித்து இரண்டு அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஒன்று இதுவாகும். அதாவது, முஸ்லிம்கள் உபல்லாஃவை, முதன் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் வெற்றி கொண்டனர். ஆனால், பின்னர் மீண்டும் அது ஈரானியர்களின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டது. ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் முஸ்லிம்கள் மீண்டும் முழுமையாக கைப்பற்றிவிட்டனர். மற்றோர் அறிவிப்பு இவ்வாறாகும். அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அது வெற்றிக் கொள்ளப்பட்டது. (ஹேகலின் நூல்: ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீகே அக்பர்(ரலி) பக்கம் 269)

எவ்வாறு இருப்பினும், தபரீ தமது வரலாற்று நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் இந்தப் போரின் சுருக்கமான குறிப்பை பதிவு செய்துள்ளார். எனினும், அதன் பிறகு அவர் இவ்வாறு எழுதுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் உபல்லாஃ வெற்றியின் சம்பவம், பொதுவான வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் ஸஹீஹான அறிவிப்புகளுக்கு எதிரானதாகும். ஏனென்றால், உபல்லாஃவின் வெற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹிஜ்ரி 14ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் (ரலி) அவர்களின் கைகளின் மூலம் கிடைத்தது. (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 310, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஏனைய வரலாற்று நூல்களில் உபல்லாஃப் போர் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சில வரலாற்றாசிரியர்கள் இதனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் முதன் முறை நிகழ்ந்ததாக எடுத்துரைக்க விரும்புகின்றனர். சிலர் அதனை மறுக்கின்றனர். அதாவது, அந்தப் போர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் அல்ல மாறாக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்ததாக அவர்கள் கூறுகின்றனர். ஆனால், சில வரலாற்று நூல்களில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரின் அருளுக்குரிய காலத்திலும் உபல்லாஃப் போர் மற்றும் உபல்லாஃ வெற்றி பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. அது முதன் முறையாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் வெற்றிக் கொள்ளப்பட்டது. ஆனால், பின்னர் ஈரானியர்களின் கடல் வழி உதவிகளினால், உபல்லாஃ வாசிகள் கிளர்ச்சி செய்து விடுதலை பெற்றுக் கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் அது மீண்டும் வெற்றிக் கொள்ளப்பட்டது. (பேராசிரியர் அலி முஹ்ஸின் சித்தீகி அவர்களின் அஸ் ஸித்தீக் எனும் நூல், பக்கம் 128)

எவ்வாறு இருப்பினும், உபல்லாஃப் போர் பற்றிய சில விவரம் இவ்வாறு கிடைக்கின்றது: ஸாதுஸ் ஸலாஸில் போர் முடிவுற்றபோது, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்களை தோற்றுப்போன ஈரானியர்களின் படைகளை பின்தொடர்ந்து செல்வதற்கு அனுப்பி இருந்தார்கள். மேலும், அத்துடன் உபல்லாஃ சென்றடைந்து போர் செல்வங்களை ஒன்று திரட்டுங்கள். மேலும், கைதிகளை சிறைபிடித்து விடுங்கள் என்ற கட்டளைகளை வழங்கி ஹஸ்ரத் முஃகல் (ரலி) அவர்களை உபல்லாஃவிற்கு அனுப்பினார்கள். எனவே, முஃகல் அங்கிருந்து புறப்பட்டு உபல்லாஃ சென்றடைந்தார்கள். மேலும், போர் செல்வங்களையும், கைதிகளையும் ஒன்று கூட்டினார்கள். (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 310)

அடுத்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் அதன் வெற்றிக் குறித்து கிடைக்கும் விவரங்கள் இவ்வாறாகும்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் (ரலி) அவர்களை ஹிஜ்ரி 14அல்லது 15 ஆம் ஆண்டில் பஸராவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உத்பா (ரலி) அவர்கள் அங்கு ஒரு மாதம் தங்கியிருந்தார்கள். உபல்லாஃ வாசிகள் அன்னாருடன் போரிடுவதற்காக வெளியே வந்தார்கள். உபல்லாஃவின் பாதுகாப்புப் பணியில் நியமிக்கப்பட்டிருந்த அரேபியர் அல்லாத ஐநூறு போர் வீரர்களாக அவர்கள் இருந்தனர்.

ஹஸ்ரத் உத்பா (ரலி) அவர்கள் அந்த மக்களுடன் போரிட்டார்கள். மேலும் அவர்களை தோற்கடித்துவிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், ஈரானிய நகரத்திற்குள் நுழைந்துவிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் உத்பா (ரலி) அவர்கள் தமது படையினரிடம் திரும்பி வந்தார்கள். அல்லாஹ் பாரசீகர்களின் உள்ளத்தில் மதிப்பச்சத்தை ஏற்படுத்திவிட்டான். அவர்கள்

நகரத்திலிருந்து வெளியேறிவிட்டார்கள். சிறிதளவு பொருட்களை எடுத்துக் கொண்டு படகுகளில் அமர்ந்து கொண்டனர். மேலும், நதியைக் கடந்து சென்றுவிட்டனர். இவ்வாறு முழு நகரமும் காலியாகிவிட்டது. முஸ்லிம்கள் நகரத்திற்குள் நுழைந்துவிட்டனர். எந்த அளவுக்கு என்றால், போதுமான பொருட்களையும், ஆயுதங்களையும், இன்னும் பல்வேறு பொருட்களையும் கைகளில் எடுத்து வந்தனர். மேலும் அவர்களுக்கு கைதிகளும் கிடைத்தனர். இந்த அனைத்து பொருட்களில் கும்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கை எடுத்து வைத்துவிட்டு எஞ்சிய போர் செல்வங்களை முஜாஹித்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுக்கப்பட்டது. முஸ்லிம்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்தது. (அல்காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 335 தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2006)

அடுத்து ஒரு போர் மஸார் ஆகும். மஸார் போர் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் நிகழ்ந்தது. ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு இந்தப் போர் நடைபெற்றது. (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 311, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

மஸார் என்பது மைஸானில் உள்ள ஊராகும். மஸார் மற்றும் பஸராவிற்கிடையில் நான்கு நாட்கள் பயணத் தொலைவுக்கு சமமான தூரம் உள்ளது. (முஃஜமுல் பல்தான் தொகுதி 5, பக்கம் 104, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் லெபனான்)

இந்த சம்பவத்தின் நாளன்று மக்களின் நாவில், ஸஃபர் மாதம் வந்துவிட்டது. இந்த மாதத்தில் நதி ஒன்றுகூடும் இடத்தில் ஒவ்வொரு அநீதியாளரும், வரம்பு மீறுபவர்களும் கொலை செய்யப்படுவார்கள். ஸாதுஸ் ஸலாஸில் போரில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு எதிரில் ஹுர்முஸ் இருந்தான். அவன் அரசருக்கு உதவிக்காக கடிதம் எழுதினான். அரசன் அவனுடைய உதவிக்காக காரின் என்பவனின் தலைமையில் ஒருப் படையை அனுப்பினான். ஆயினும், அந்தப் படை அப்போது மஸார் எனும் இடத்தை வந்தடைந்திருந்தது. அப்போது, ஸாதுஸ் ஸலாஸில் போரில் ஹுர்முஸின் தோல்வி மற்றும் அவன் கொல்லப்பட்டத் தகவல் அந்தப் படைக்கு கிடைத்தது. அத்துடன் ஹுர்முஸ் படையினர் தோல்வியடைந்து, காரினை சென்று மஸாரில் சந்தித்தது. அவர்களில் சில படைகளின் வீரர்கள் மற்றப் படைகளின் போர்வீரர்களிடம் இவ்வாறு கூறினர்: இன்று நீங்கள் பிரிந்து சென்றுவிட்டால், பின்னர் ஒருபோதும் ஒன்றுசேர முடியாது. எனவே உடனடியாக, திரும்பி செல்வதற்கு ஒன்றுசேர்ந்துவிடுங்கள்.

தப்பியோடிய படையினரும், வந்துகொண்டிருந்த படையினரும் அதாவது ஈரானிலிருந்து வந்து கொண்டிருந்த புதியப் படையும் இருவரும் இணைந்துக் கொண்டனர்.

போர் நடைபெற வேண்டும் என்று இருவரும் ஒருவர் மற்றவருக்கு உணர்ச்சியூட்டினர். அரசனின் உதவியால் தயாரான இந்த புதியப் படை வந்தடைந்துள்ளது. அதன் படைத் தளபதி காரின் நம்முடன் இருக்கின்றார்.

இறைவன் நமக்கு வெற்றி வழங்குவதும், நாம் எதிரிகளிடமிருந்து இரட்சிப்பு பெறுவதும், மேலும், நாம் நமது பாதிப்புகளை ஓரளவிற்கு ஈடு செய்து கொள்வதும் சாத்தியமானதாகும் என்று தப்பியோடியிருந்த தரப்பினர் கூறினர். எனவே அவர்கள் அவ்வாறே செய்தனர். அவர்கள் மஸாரில் முகாமிட்டனர். ஸாதுஸ் ஸலாஸில் போரில் தப்பி ஓடிய குபாஸ் மற்றும் அனுவ் ஷிஜான் ஆகியோரை ஒவ்வொரு முதன்மை படைக்கும் நியமித்தான்.

மற்றொரு பக்கம் எதிரியின் இந்த தயாரிப்பின் தகவலை ஹஸ்ரத் முஸன்னா (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஅன்னா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் காரினைப் பற்றிய தகவல் கிடைத்ததும், ஸாதுஸ் ஸலாஸில் போரில் கிடைக்கக் கூடிய போர் செல்வங்களை, அல்லாஹ் எந்த முஜாஹித்களுக்கு போர் செல்வங்களை வழங்கியிருந்தானோ அவர்களுக்கே பிரித்துக் கொடுத்தார்கள். மேலும், கும்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கிலிருந்தும் விரும்பிய அளவில் மேலும் கொடுத்தார்கள். மேலும், ஸாதுஸ் ஸலாஸில் போரில் கிடைத்த போர் செல்வங்களில் எஞ்சியவற்றையும், அந்தப் போரில் கிடைத்த வெற்றியின் நற்செய்தியையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், ஸாதுஸ் ஸலாஸில் போரில் தோற்றுப்போன எதிரிகளின் படையினர் காரின் என்பவனின் தலைமையில் வரக்கூடிய புதியப் படையாக ஓரிடத்தில் ஒன்றிணைந்து வருகிறது என்ற தகவலையும் தெரியப்படுத்தினார்கள்.

எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், புறப்பட்டார்கள். மேலும் மஸார் என்ற இடத்தில் காரினின் படையுடன் மோதுவதற்கு சென்றார்கள். மேலும், தமது படையை அணிவகுக்கச் செய்தார்கள். இரு தரப்பிலிருந்தும் தாக்குதல் நிகழ்ந்தது. இரண்டு படையினரும் மிகவும் ஆக்ரோஷமான நிலையில் சண்டையிட்டுக் கொண்டனர். காரின் சண்டையிடுவதற்காக மைதானத்தில் இறங்கினான்.

மற்றொரு பக்கம், அவனை எதிர்கொள்வதற்காக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் முஃகல் பின் அஃஷா (ரலி) அவர்களும் முன்னேறிச் சென்றார்கள். இருவரும் காரின் என்பவன் மீது பாய்ந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஃகல் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு முன்பாகவே காரினைக் பார்த்துவிட்டார்கள். மேலும் அவனைக் கொன்றுவிட்டார்கள். ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள், அனுவ் ஷஜானையும் ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் குபாஸையும் கொன்றுவிட்டார்கள். இந்த மூன்று தலைவர்களும் கொல்லப்பட்டுவிட்டதனால் ஈரானியர்கள் தைரியம் இழந்துவிட்டனர். மேலும், போர் மைதானத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

இந்தப் போரில் மிகப் பெரும் எண்ணிக்கையில் பாரசீகர்கள் கொல்லப்பட்டனர். மேலும், உயிர் பிழைத்தவர்கள் படகுகளில் சவாரி செய்து ஓடிவிட்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மஸாரில் தங்கினார்கள். கொலையுண்ட ஒவ்வொருவரின் பொருட்கள் அவை எவ்வளவு விலை கொண்டதாக இருந்தாலும், அதனை அவர்களைக் கொன்ற முஜாஹித்களுக்கே கொடுத்தார்கள். ஃபே எனும் போர் செல்வங்களையும் அவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தார்கள். மேலும், கும்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கிலிருந்து, அந்தப் போரில் சிறப்பான பணிகளை செய்திருந்த மக்களுக்கும் பங்கு கொடுத்தார்கள். கும்ஸின் எஞ்சிய பங்குகளை ஹஸ்ரத் சயீத் பின் நுஃமான் (ரலி) அவர்களின் தலைமையில் ஒருக் குழுவின் மூலம் மதீனா அனுப்பி வைத்துவிட்டார்கள். ஓர் அறிவிப்பின் படி, அந்தப் போரில் மூன்றாயிரம் ஈரானியர்கள் கொல்லப்பட்டனர்.

இதில் நதியில் மூழ்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை. தண்ணீர் தடையாக அமையாமல் இருந்திருந்தால், அவர்களில் ஒருவர் கூட உயிருடன் தப்பியிருக்க முடியாது. இருப்பினும், உயிர் பிழைத்து தப்பியோடியவர்களும் கூட மிக மோசமான நிலையில், தமது அனைத்து பொருட்களையும் விட்டுவிட்டே ஓடினர் என்று கூறப்படுகிறது.

போருக்குப் பிறகு, போரில் பங்கு பெறக்கூடியவர்கள் மற்றும் ஈரானியப் படைக்கு ஆதரவளித்தவர்கள் ஆகியோர் குடும்பத்துடன் கைது செய்யப்பட்டார்கள். அந்தக் கைதிகளில் அபுல் ஹஸன் பஸரியும் அடங்குவார். அபுல் ஹஸன் பஸரியைப் பற்றி இவ்வாறு கூறப்படுகிறது:

அவர், பஸராவின் மிகவும் பிரபலமான அறிவுரையாளரும், சூஃபியுமான இமாம் ஹஸன் பஸரியின் தந்தை ஆவார். அன்னார் முஸ்லிம் ஆகியிருந்தார்கள். அபுல் ஹஸன் கைது செய்யப்பட்ட பிறகு, மதீனா கொண்டு

வரப்பட்டார். அங்கு அன்னாரது எஜமானி அவரை விடுதலை செய்து விட்டார்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 311-312 தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012)

இந்த வெற்றிக்குப் பிறகு, பொது மக்களுடன் மிகவும் மென்மையுடன் நடந்து கொள்ளப்பட்டது. விவசாயிகள் மற்றும் ஏனைய அனைத்து மக்களுக்கும் எவ்வித துன்பமும் கொடுக்காமல் அவர்கள் ஜிஸ்யா வரி செலுத்துவதற்கு தயார் செய்யப்பட்டார்கள். அவர்களின் நிலங்களிலும், இடங்களிலும் அவர்கள் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இந்த தொடக்க விவகாரங்களை முடித்த பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், வெற்றிக் கொள்ளப்பட்ட பகுதிகளில் நிர்வாக ஏற்பாடுகளின் பக்கம் கவனம் செலுத்தினார்கள்.

ஜிஸ்யா வரி வசூல் செய்வதற்கு, முறையாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். வெற்றிக் கொள்ளப்பட்ட பகுதிகளின் பாதுகாப்பிற்காக, ஹஃபீர் மற்றும் ஜிஸ்ரி அஃஸம் அதாவது மாபெரும் பாலத்தில் படைகளை நிறுத்தியிருந்தார்கள். அன்னாரின் நிர்வாகம் மேலும் சிறப்பாக ஆக்கப்பட்டது. இராணுவத்தின் அனைத்து படைப்பிரிவுகளையும் பல்வேறு அதிகாரிகளின் மேற்பார்வையில் வைத்து, அவர்களை எதிரிகளின் இரகசியமான மற்றும் வெளிப்படையான நடவடிக்கைகளை அறிந்து வைத்துக் கொள்வதற்கும், சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவர்களுடன் போர் புரிவதற்கும் அவர்களுக்கு கட்டளை வழங்கப்பட்டது. ஈரானிய மண்ணில் அன்னார் (ரலி) அவர்களின் முதன்மை நடவடிக்கைகளின் துவக்கத்திலேயே கிஸ்ராவின் வலிமையான படைகள் தோல்வியுறத் தொடங்கிவிட்டன. மேலும், அவர்களின் பெருமை, தைரியம், உணர்வு என அனைத்தும் தணிந்துவிட்டன என்ற விஷயத்தை விட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் போர்த் திறமைகளுக்கு வேறு என்ன சான்று இருக்க முடியும்!

மஸார் போர், ஹீராவிலிருந்து சிறிது தொலைவிலேயே நிகழ்ந்திருந்தது. ஏறத்தாழ ஹீரா விரிகுடா மற்றும் பஹ்ரைனிற்கு மத்தியிலேயே அது அமைந்துள்ளது. (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீகே அக்பர் (ரலி), பக்கம்275, மொழிபெயர்ப்பாளர்-ஷேக் முஹம்மது அஹ்மது பானிபதீ, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர்ஸ் லாஹூர் 2004)

இந்தப் போருக்குப் பிறகான விவகாரங்களை முடித்த பிறகு, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் எதிரியின் நடவடிக்கைகளை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதில் ஈடுபட்டிருந்தார்கள். (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 312, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்2012)

எதிரிகளின் நடமாட்டம் என்ன? அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக மீண்டும் ஒன்று சேர்கின்றார்களா? என்பதை அறிந்து கொள்ள அவ்வாறு செய்தார்கள்.

லஜஹ் போர் என்பது ஒரு போர் ஆகும். லஜஹ் போர் ஹிஜ்ரி 12ஆம்ஆண்டு, ஸஃபர் மாதத்தில் நிகழ்ந்தது. லஜஹ் என்பது கஸ்கர் என்ற இடத்திற்கு அருகில் உள்ள வறண்ட பகுதியாகும். மஸார் போரில் ஈரானியர்களுக்கு எந்த அளவிற்கு மோசமான தோல்வியை சந்திக்க நேரிட்டது என்றால், அதில் பெரும், பெரும் தலைவர்களும் கொல்லப்பட்டனர். அதனால், ஈரானிய பேரரசன் மேலும் ஒரு செயல்திட்டத்தை வகுத்தவாறு அதிக தயாரிப்புகளுடன் முஸ்லிம்களுக்கு எதிராக போரிடுவதற்கு திட்டம் தீட்டியிருந்தான்.

எனவே, ஈரானிய அரசாங்கம் ஈராக்கில் வசிக்கக் கூடிய கிறித்துவர்களின் ஒரு மிகப் பெரிய கோத்திரமான பக்ர் பின் வாயிலின் தலைமையிலான மக்களை ஈரானிய அரசவைக்கு அழைத்தான். அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராக போரிடுவதற்கு ஆயத்தப்படுத்தி ஒரு படையை வடிவமைத்தான். மேலும், அந்தப் படையின் தலைமைப் பொறுப்பை மிகவும் பிரபலமான போர்வீரன் அன்தர் ஸகர் என்பவனிடம் ஒப்படைத்தான். மேலும் அந்தப் படை லஜஹ்வை நோக்கி புறப்பட்டுவிட்டது. கிறித்தவர்களின் மிகப் பெரிய ஒரு கோத்திரமான பக்ர் பின் வாயில் ஈராக்கில் வசித்து வந்தது. அர்து ஷேர் என்ற பேரரசன் அவர்களை அழைத்தான். மேலும் அவர்களின் ஒரு படையை வடிவமைத்து, அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராக போரிடுவதற்காக லஜஹாவை நோக்கி அனுப்பி வைத்தான். ஹீரா மற்றும் கஸ்கரின் புறநகர் பகுதிகளில் உள்ள மக்களும், கிஸான் மக்களும் அந்தப் படையில் இணைந்து கொண்டனர். ஹீரத் கூஃபாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் தென்மேற்கில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். கஸ்கர், கூஃபா மற்றும் பஸராவிற்கு இடையில் அமைந்துள்ள ஓர் ஊராகும்.

எவ்வாறு இருப்பினும், முஸ்லிம்களின் மீது பெறும் வெற்றியின் பெருமை முற்றிலும் கிறித்துவ அரேபியர்களுக்கு கிடைத்து விடக் கூடாது என்ற எண்ணத்தில் தனது ஒரு மிகப் பெரிய படைத் தளபதியான பஹ்மன் ஜாஸ்வயாவையும் ஒரு பெரும் படையுடன் அவர்களுக்குப் பின்னாலேயே அனுப்பி வைத்துவிட்டான். (தாரீகுத் தபரீ, தொகுதி 2, பக்கம் 312, தாருல் குதுபில் இல்மியா, 2012)

தமது படை மிகவும் பெருகிவிட்டது என்பதை அந்த பாரசீகத் தலைவன் உணர்ந்தபோது, அவன் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு முடிவெடுத்தான். பாரசீகர்களின் படை லஜஹா என்ற இடத்தில் ஒன்றுகூடுகிறது என்ற செய்தி ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அந்த நேரத்தில் அன்னார் (ரலி) அவர்கள் பஸராவிற்கு அருகில் இருந்தார்கள். பாரசீகப் படையின் மீது மூன்று இடங்களிலிருந்து தாக்குதல் நடத்துவதை அன்னார் உகந்ததாகக் கருதினார்கள். அப்போதுதான் அவர்களின் கூட்டம் சிதறுண்டுவிடும். மேலும், இவ்வாறு நடைபெறும் திடீர் தாக்குதலால் பாரசீகப் படை பிரச்சனைகளுக்கு இரையாகிவிடும் என்று அன்னார் (ரலி) அவர்கள் எண்ணினார்கள். (டாக்டர் அலி முஹம்மது ஸலாபியின் மொழிபெயர்ப்பு நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி) பக்கம் 406)

எனவே அன்னார் (ரலி) அவர்கள் ஸுவைத் பின் முகர்ரின் என்பவரை செயல் தலைவராக நியமித்தார்கள். மேலும் ஹுஃபைரிலேயே தங்கியிருக்கும் படி அவருக்கு கட்டளை வழங்கினார்கள். மேலும், திஜ்லா எனும் இடத்தின் கீழ் பகுதியில் விட்டுவிட்டு வந்த மக்களை அன்னார் சென்றடைந்தார்கள். மேலும், எதிரிகளிடமிருந்து எந்நேரமும் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும், கவனக் குறைவு மற்றும் ஏமாற்றத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்றும் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். பின்னர் அன்னார்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

(ரலி) தமது படையை அழைத்துக் கொண்டு லஜஹாவின் பக்கம் முன்னேறிச் சென்றார்கள். மேலும், எதிரியின் படை மற்றும் அவர்களின் ஆதரவுக் கூட்டத்தினருக்கு எதிராக போரில் இறங்கினார்கள். மிகக் கடுமையானப் போர் நிகழ்ந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத்(ரலி) அவர்கள், படையின் இரண்டு பக்கமும் முஜாஹித்கள் மூலமாக வலை விரித்து வைத்திருந்தார்கள். இறுதியில் இரண்டு பக்கமும் பதுங்கியிருந்த இரண்டு படைகளும் இரண்டு பக்கத்திலிருந்தும் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானியப் படை தோல்வியுற்று ஓடிவிட்டது. ஆனால், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், முன்னால் பதுங்கியிருந்த இரண்டு படைகளால், எதிரிகளின் பின்னால் இருந்து அவர்களை எவ்வாறு சுற்றி வளைத்துவிட்டார்கள் என்றால், அவர்கள் திகைத்து நின்றுவிட்டனர். எந்த அளவுக்கு என்றால், தமது தோழர்கள் கொல்லப்படுவதைக் கூட ஈரானியர்கள் பொருட்படுத்தவில்லை. எதிரி படையின் போர் படைத் தளபதி தோற்கடிக்கப்பட்டு இறுதியில் கொல்லப்பட்டுவிட்டான். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் விவசாயிகளுடன் தமது நடைமுறைக்கேற்ப நடந்து கொண்டார்கள். அதாவது, அவர்களில் யாரையும் அன்னார்(ரலி) கொலை செய்யவில்லை. போர்புரிந்த மக்களின் பிள்ளைகள் மற்றும் அவர்களின் உதவியாளர்களை மட்டும் அன்னார்(ரலி) அவர்கள் கைது செய்தார்கள். சாதாரண குடிமக்களுக்கு ஜிஸ்யா வரி கொடுப்பதற்கும், ஸிம்மீயாக ஆகுவதற்கும் அன்னார் அழைப்புக் கொடுத்தார்கள். அதனை அந்த மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

(தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 312, தாருல் குதுபில் இல்மியா 2012)

அடுத்து, உல்லைஸ் போர் பற்றிய குறிப்பு உள்ளது. ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் உல்லைஸ் போர் நடைபெற்றது. உல்லைஸ் என்பதும் ஈராக்கில் அன்பாரின் ஊர்களில் ஓர் ஊராக இருந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் கைகளின் மூலம் லஜஹாவின் நாட்களில் பக்ரி பின் வாயில் கோத்திரத்தாருக்கும், ஈரானியர்களுக்கும் ஏற்பட்ட மற்றொரு படிப்பினை மிக்கத் தோல்வியால் அவர்களின் ஆதரவாளர்களான கிறித்துவக் கோத்திரம் மிகவும் கோபமடைந்தது. அவர்கள் ஈரானியர்களுக்கும், ஈரானியர்கள் அவர்களுக்கும் கடிதங்கள் எழுதினர். உல்லைஸ் என்ற இடத்தில் அனைவரும் ஒன்று திரண்டனர். அவர்களின் தலைவராக அப்துல் அஸ்வத் இஜ்லி நியமிக்கப்பட்டார்.

அதேபோன்று, ஈரானிய அரசன் பஹ்மன் ஜாஸ்வயாவிற்கு, நீங்கள் படைகளை அழைத்துக் கொண்டு உல்லைஸிற்கு வந்துவிடுங்கள். மேலும் அங்கு ஒன்று திரண்டுள்ள பாரசீக மற்றும் அரேபிய கிறித்துவ மக்களுடன் சென்று இணைந்து கொள்ளுங்கள் என்று அவருக்கு கடிதம் எழுதப்பட்டது. ஆனால், பஹ்மன் ஜாஸ்வயா சுயமே படையை அழைத்துக் கொண்டு செல்லவில்லை. எனினும், தனது இடத்தில் மற்றொரு சிறந்த வீரரான ஜாபானை அனுப்பி வைத்தான். மேலும், மக்களின் உள்ளங்களில் போருக்கான உணர்வை உருவாக்குங்கள். எனினும், அவர்கள் சுயமே முந்திக் கொண்டால் தவிர, நான் வரும் வரை போரைத் துவங்க வேண்டாம் என்று அவனுக்கு கட்டளை வழங்கினான். ஜாபான் உல்லைஸை நோக்கி புறப்பட்டான். பஹ்மன் ஜாஸ்வயா சுயமே ஈரானிய மன்னன் அர்தஷேரிடம் ஆலோசனை செய்வதற்காக சென்றான். ஆனால், அங்கு சென்று அவர் நோயுற்றிருப்பதைக் கண்டான். எனவே, பஹ்மன் ஜாஸ்வயா அவரை நலம் விசாரிப்பதில் ஈடுபட்டான். மேலும், ஜாபானிற்கு எந்த வழிகாட்டலும் அனுப்பவில்லை. ஜாபான் தனியாகப் படையுடன் போர் மைதானத்தைக் நோக்கிச் சென்று, ஸஃபர் மாதத்தில் உல்லைஸை வந்தடைந்தான். (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 313, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் மற்றும் லெப்னான் 2012)

பல்வேறு கோத்திரத்தங்களும், ஹீராவின் புறநகர் பகுதிகளின் அரேபிய கிறித்தவர்களும் ஜாபானுடன் ஒன்றிணைந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு, அந்த கிறித்தவ கோத்திரங்கள் ஒன்றிணைவதாக தகவல் கிடைத்தபோது, அன்னார் (ரலி) அவர்களுடன் போரிடுவதற்கு புறப்பட்டார்கள். ஆனால், ஜாபானும் அருகில் வந்துவிட்டான் என்பதை அன்னார் அறிந்திருக்கவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த அரேபியர்களுடனும், கிறித்தவர்களுடனும் போரிடும் எண்ணத்துடன் சென்றிருந்தார்கள். ஆனால், உல்லைஸில் ஜாபானை எதிர் கொள்ள நேரிட்டது. ஜாபான் உல்லைஸை வந்தடைந்தபோது அந்த சந்தர்ப்பத்தில் அரேபியர் அல்லாதோர் ஜாபானிடம், உங்களின் கருத்து என்ன? முதலில் நாம் அவர்களை எதிர்கொள்ள வேண்டுமா? அல்லது மக்களுக்கு உணவு வழங்க வேண்டுமா? என்று கேட்டனர். அதாவது, போரைத் துவங்க வேண்டுமா? அல்லது முதலில் உணவு உண்ணலாமா? உணவு உண்டு முடித்தப் பிறகு, அவர்களுடன் போர் புரியலாமா? என்றுக் கேட்டனர். ஜாபான் கூறினான்: எதிரி உங்களை சீண்டவில்லையென்றால், நீங்களும் அமைதியாக இருங்கள். ஆனால், எனது கருத்தின்படி, அவர்கள் உங்கள் மீது திடீர் தாக்குதல் தொடுப்பார்கள். உங்களை உணவு அருந்த விடமாட்டார்கள். அவர்கள் ஜாபானின் பேச்சை ஒப்புக் கொள்ளவில்லை. உணவு விரிப்பை விரித்தனர். உணவு பரிமாறப்பட்டது. அனைத்து மக்களும் உணவு உண்பதில் மும்முரமாகிவிட்டார்கள். (அல் காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 241, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எதிரிகளுக்கு எதிராக போரிட வந்து நின்றுவிட்டார்கள். பொருட்களை இறக்குவதற்கு கட்டளை வழங்கினார்கள். அந்த பணிகளை முடித்துவிட்டு எதிரியின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது உடன்படிக்கையை பேணுவதற்காக பாதுகாவலர்களை நியமனம் செய்தார்கள்.

மேலும், எதிரிகளின் ஸஃப்களின் பக்கம் சென்று அப்ஹர் எங்கே? அப்துல் அஸ்வத் எங்கே? மாலிக் பின் கைஸ் எங்கே? என்று அவர்களை சீண்டியவாறு கூறினார்கள். மாலிகைத் தவிர மற்ற அனைவரும் கோழைத்தனத்தின் காரணமாக மௌனமாக இருந்தனர். மாலிக் அன்னாருடன் போரிட வெளியே வந்தான். ஹஸ்ரத் காலித் (ரலி), அவர்கள் அனைவரையும் விட உம்மை, எனக்கெதிரில் போரிட வருவதற்கு எந்த விஷயம் தூண்டியது? எனக்கு எதிராக போரிடுவதற்கு உனக்கு என்ன வலிமை உள்ளது? என்று அவனிடம் கேட்டார்கள். இந்த விஷயத்தைக் கூறிவிட்டு, அன்னார் (ரலி) அவர்கள் அவன் மீது தாக்குதல் நடத்தினார்கள். மேலும் அவனைக் கொன்றுவிட்டார்கள். அரேபியர் அல்லாதோர் கொஞ்சம் உணவு உண்பதற்கு முன்னதாகவும், உணவுத் தட்டிலிருந்து கொஞ்சம் உணவை எடுப்பதற்கு முன்பாகவும், உணவு உண்ண ஆரம்பிக்க வேண்டாம் என முன்னர் நான் உங்களிடம் கூறியிருக்கவில்லையா? என்று ஜாபான் தனது மக்களிடம் கூறினான்.

இறைவன் மீது ஆணையாக! இன்று இந்தப் போரில் நிகழ்வது போல, இதற்கு முன் வேறு எந்த போர் வீரரிடமிருந்தும் தோல்வி கிடைத்திருக்கவில்லை. அந்த மக்களால் உணவு உண்ண முடியாமல் ஆன பிறகு, உணவை நாங்கள் இப்போதைக்கு விட்டுவிடுகிறோம் எதுவரையென்றால், முஸ்லிம்களின் கதையை முடித்துவிட்டு வந்து பின்னர் நாங்கள் உணவு உண்போம் என்று அவர்கள் தமது வீரம் குறித்து பெருமையடிப்பதற்காக கூறினர். அப்போது, ஜாபான் இவ்வாறு கூறினான்: இறைவன் மீது ஆணையாக! இந்த உணவை நீங்கள் எதிரிக்காக விட்டுவைத்துள்ளீர்கள் என்பது எனது

எண்ணமாகும். நாங்கள் வெற்றி பெற்றுவிடுவோம். பின்னர் உணவு உண்போம் என நீங்கள் எண்ணம் கொள்ளாதீர்கள். இன்னும் கூறப்போனால், உங்களது இந்த உணவை உங்களது எதிரிகளே உண்பார்கள் என்று எனக்கு தோன்றுகிறது. அதாவது, முஸ்லிம்களே உண்பார்கள். ஆனால், நீங்களோ அறிவு கொள்வதில்லை. எனது கூற்றை ஏற்பதாக இருந்தால், உணவில் விஷத்தை கலந்துவிடுங்கள் என்று அவன் மக்களிடம் கூறினான். உங்களுக்கு வெற்றி கிடைத்தால், உணவு வீணாகி விடுகின்ற இந்த பாதிப்பு என்பது மிகக் குறைவான பாதிப்பு ஆகும். ஒருவேளை எதிரி வெற்றி பெற்றுவிட்டால், நீங்கள் எப்படிபட்ட ஒரு பணியை செய்து முடித்திருப்பீர்களென்றால், அதனால் விஷத்தன்மை கொண்ட உணவை உண்டதன் காரணமாக எதிரி துன்பத்தில் மூழ்கிவிடுவான் என்று அவன் கூறினான். ஆனால், அந்த மக்களுக்கு தங்களது வெற்றியின் மீது உறுதியான நம்பிக்கை இருந்தது. அதற்கு அவர்கள் கூறினர்: வேண்டாம். உணவில் விஷத்தை கலப்பதற்கு அவசியமில்லை. நாம் எளிதாக போரை வென்றுவிடுவோம். மேலும், பின்னர் உணவையும் உண்போம்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது படையை முந்தைய போர்களில் அணிவகுத்து நிற்கச் செய்ததுபோன்று அணிவகுத்து நிற்கச் செய்தார்கள். மிகக் கடுமையான போர் மூழத் தொடங்கியது. ஈரானியர்களுக்கு பஹ்மன் ஜாஸ்வியாவின் வருகையில் நம்பிக்கை இருந்தது. எனவே மிகவும் ஒன்றிணைந்து கடுமையாக சண்டையிட்டனர். ஏனென்றால், அவர் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டுவிட்டான் என்றும், தற்போது வந்தடைந்து விடுவான் என்றும் ஜாபான் அவர்களுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தான். ஆனால், உண்மை நிலவரம் என்னவாக இருந்ததென்றால்,

ஈரானிய மன்னன் நோயுற்று இருந்த காரணத்தினால், நிலைமையை மன்னனுக்கு எடுத்துக் கூறுவதற்கு பஹ்மனுக்கு வாய்ப்பும் கிடைக்கவில்லை. அவன் சுயமே படையை அழைத்துக் கொண்டு வரமுடியவுமில்லை. இன்னும் கூறப்போனால், அவனுக்கு ஜாபானுடன் எவ்வகையிலும் தொடர்பும் இருக்கவில்லை. எவ்வாறு இருப்பினும், அந்தப் போரில் முஸ்லிம்களும் அவர்களுக்கு எதிராக அதிக உணர்வும் கோபமும் கொண்டார்கள். மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 313, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஈரானியப் படையின் உத்வேகம் மற்றும் உணர்வையும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பலவீனமான நிலைமையையும் குறிப்பிட்டவாறு, வாழ்க்கை வரலாற்றாசிரியர் ஒருவர் இவ்வாறு எழுதுகிறார்: ஈரானிய படையிலிருந்து முதலில் கிறித்தவர்கள் தாக்குதல் தொடுத்தனர். ஆனால், அவர்களின் தலைவன் மாலிக் பின் கைஸ் கொல்லப்பட்டான். அவன் கொல்லப்பட்டதும், அவர்களின் மூச்சு நின்றுவிட்டது. மேலும் மனம் உடைந்துபோய் விட்டனர்,

இதைக் கண்ட ஜாபான், ஈரானிய படையை முன்னால் தள்ளினான். தற்போது பஹ்மன் புதுப் படையை அழைத்துக் கொண்டு வந்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் முழுதைரியத்துடன் போரிட்டனர். முஸ்லிம்கள் மீண்டும், மீண்டும் தாக்குதல் நடத்தினர். ஆனால், ஒவ்வொரு முறையும் ஈரானியர்கள் முழுமையான வீரத்துடனும், நிரந்தர மனப்பான்மையுடனும் தாக்குதல்களை தோல்வியுறச் செய்துவிட்டனர். இறுதியில், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், பௌதீக காரணிகள் போதுமற்றதாக இருப்பதைக் கண்டு மிகவும் உருக்கத்துடன், கையை உயர்த்தி துஆ வேண்டினார்கள். அல்லாஹ்வே! நீ என்னை எதிரியின் மீது மேலோங்கச் செய்துவிட்டால், நான் ஒரு எதிரியைக் கூட உயிருடன் விடமாட்டேன். மேலும், இந்த நதி அவர்களின் இரத்தத்தால் சிவப்பாகிவிடும் என்று கூறினார்கள்.

சில நூல்களில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், இந்தப் போரில் (எங்களுக்கு) வெற்றி கிடைத்தால் எந்த ஒரு எதிரியையும் உயிருடன் விட மாட்டேன் என்று சத்தியம் செய்திருந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், அதன் பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் போர் தந்திரங்களை மேற்கொண்டவாறு படையை வலப்புறமிருந்தும், இடப் புறமிருந்தும் ஈரானிய படையின் மீது தாக்குதல் நடத்துவதற்கு கட்டளையிட்டார்கள். அந்த தாக்குதலால் ஈரானியப் படை சிதறுண்டு போய்விட்டது. ஓட்டம் பிடிப்பது அல்லது ஆயுதங்களை கீழே போட்டுவிடுவதுதான் தங்களுக்கு பாதுகாப்பு உள்ளது என்பதைக் அவர்கள் கண்டுகொண்டனர். எதிரிகளை சிறைபிடித்து கைதிகளாக்கிவிடுங்கள். மேலும், சண்டையிடுபவர்களைத் தவிர வேறு எவரையும் கொல்லாதீர்கள். எதிர்த்து போரிடுபவர்களை மட்டுமே கொல்லுங்கள் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். (சீரத் ஸய்யிதுனா சித்தீக் அக்பர் (ரலி) அவர்கள், பக்கம் 671-672) (தாரீகுத் தபரீ உருது, தொகுதி 2, பக்கம் 564, தாருல் இஷாஅத்)

இது தொடர்பாக, ஆராய்ச்சிக் குழுவின் ஒரு நோட் உள்ளது. அதுவே சரியானதாகத் தெரிகிறது. அதனை விவரித்தவாறு, தாரீகே தபரீ உட்பட பெரும்பாலான வாழ்க்கை வரலாற்று கட்டுரையாளர்களும், வரலாற்றாசிரியர்களும், இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது இந்த துஆவில் செய்திருந்த அந்த வாக்குறுதிக்கு ஏற்ப, அந்த நதியின் தண்ணீர் இரத்தத்தால் சிவப்பு நிறமாக மாற வேண்டும் என்பதற்காக, ஒரு பகல் மற்றும் ஓர் இரவில் அந்த கைதிகள் கொலை செய்து நதியில் வீசப்பட்டார்கள். அதாவது, அன்னார் போர் புரிந்த மக்களுடன் மட்டும் போர் புரியவில்லை. மாறாக, கைதிகளையும் கொன்றுவிட்டார்கள். இதன் காரணமாக, இந்த நதி இன்று வரை நஹ்ருத் தம் அதாவது, இரத்த ஆறு என்ற பெயரால் பிரபல்யமாகி உள்ளது. (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 314, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஆனால், எவ்வாறு இருப்பினும், கைதிகள் கொலை செய்யப்பட்டு பின்னர் நதியில் வீசப்பட்டார்கள் என்பது உண்மையாகத் தெரியவில்லை. வரலாற்றாசிரியர்கள் இதனை மிகைப்படுத்தியுள்ளனர் அல்லது எவர்கள் இஸ்லாமியப் போர்களில் வேண்டுமென்றே அநீதி, அக்கிரமங்களுக்கான பொய் கதைகளை சேர்ப்பதற்கு எண்ணம் கொண்டு அமர்ந்திருந்தார்களோ, அவர்கள் எங்கு வாய்ப்பு கிடைத்தாலும் தங்கள் புறமிருந்து இது போன்ற சம்பவங்களை இணைத்துவிடுகின்றனர்.

வரலாற்றாசிரியர்களில் சில எதிரிகளும் இருந்தனர். அதுபோன்ற பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் கொண்டவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக ஏதாவது ஒரு விஷயத்தை எழுதி வந்தனர். எனவே அத்தகைய சிலர் கைதிகளை கொலை செய்து நதியில் வீசிவிட்டார்கள் என்று எழுதிவிட்டனர். ஆனால், அதுபோன்ற விஷயங்கள், மற்றும் ஏமாற்றுவேலையின் மூலமாக பாருங்கள்! முஸ்லிம்கள் எவ்வாறு அநீதி அக்கிரம் செய்துள்ளனர், நிராயுதபாணியான கைதிகளை கொலை செய்து விட்டனர் என்று மக்கள் முன் எடுத்துவைப்பதற்காக அவை இடையில் சேர்க்கப்பட்டவை என்று வெளிப்படையில் தெரிகின்றது.

முதலாவதாக, கைதிகளை கொலைசெய்வது என்பது அந்தக் காலத்து சட்டதிட்டங்களுக்கேற்பவும், அப்போது நடைமுறையில் இருந்த போர் சட்டங்களின்படியும் எவ்வகையிலும் ஆட்சேபனைக்குரிய ஒரு விவகாரம் கிடையாது. ஆனால், இஸ்லாமிய போர்கள் குறிப்பாக,ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலத்திலும், கிலாஃபத்தே ராஷிதாவின் காலத்து போர்களிலும் உள்ளபடியே கைதிகள் இவ்வாறு கொலை

செய்யப்படவில்லை. அந்தப் போர்களில் ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் வரை கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை கிடைக்கின்றது. ஆயினும், அவர்கள் அனைவருமே போர் செய்த நிலையில் போர் மைதானத்தில கொல்லப்பட்டிருந்தனர். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களைப் போன்ற படைத் தளபதிகளின் போர்களை ஆய்வு செய்து பார்த்தால், அவர்களால் இயன்ற வரை போர் மைதானத்திலும் கூட ஆயுதங்களை கீழே வீசிவிட்ட அல்லது கட்டுப்படுதலை மேற்கொண்ட ஒவ்வொரு நபரையும் உயிருடன் விட்டுள்ளார்கள். (அநியாயமாக அன்னார் எவரையும் கொலை செய்யவில்லை).

எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவத்தை எடுத்துக் கொண்டால் அதில் சில புனையப்பட்ட கதைகளும் அதிகம் இருப்பதாக தெரிய வருகிறது. ஏனென்றால், வராலாற்றாசிரியர்களும், வாழ்க்கை வரலாறு கட்டுரையாளர்களும் அனைத்து விளக்கங்களையும் எடுத்துரைக்கின்றனர். மேலும், அவ்வாறு எடுத்துரைத்தவாறு சிறிதிலும், சிறிதான எல்லா விஷயங்களையும் எடுத்துரைக்கின்றனர். ஆனால் அவர்களில் சிலர் அந்த சம்பவத்தை முற்றிலும் குறிப்பிடவேயில்லை. இது அது புனையப்பட்ட சம்பவம் என்பதற்கான சான்றாகும். ஆட்சேபனை செய்யும் வகையிலான எப்படிபட்ட விஷயங்களை எடுத்துரைக்கின்றனர் என்றால், அதில் உடன்பட முடியாது. அறிவிப்பாளர்கள் இந்த அறிவிப்புகளை செய்துவிட்டு மிகைப்படுத்துதலின் உச்சத்தை தொட்டுவிட்டார்கள். காலித் இஸ்லாமிய எதிரிகளை கொலை செய்வதில் எந்த அளவிற்கு கடுமை காட்டினார் என்றால், அதைக் கண்டு கஃகாஆ மற்றும் அவரது தோழர்களால் கூட சகித்துக் கொள்ள முடியவில்லை என்றும் கூட வரலாற்றாசிரியர்கள் மிகைப்படுத்தி எழுதியுள்ளனர். (டாக்டர் தாஹா ஹுஸைன் அவர்களின் நூல்- ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாரூக் அஃஸம்(ரலி) பக்கம் 85-86)

இதே போன்று, ஒரு நூலாசிரியர் இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார். அதாவது, கடுமை காட்டினார்கள் தான். ஆனால். கைதிகளை கொலை செய்தது என்பது தவறானது ஆகும். அதே போன்று மற்றொரு நூலாசிரியர் இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார். அதிலிருந்து, செயல்ரீதியாகவோ அல்லது உண்மையாகவோ ஈரானியர்கள் கொலை செய்யப்பட்டு ஆற்றில் வீசப்படவில்லை.

அந்த நூலாசிரியர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் துரிதமாக தாக்குதல் நடத்தி கிறித்தவர்களை எவ்வாறு துண்டித்தார்கள் மேலும் ஈரானியப் படையின் ஸஃப்களை எவ்வாறு அழித்தார்கள் என்றால் அவர்கள் மண்ணால் ஆன பொம்மைகள் போன்றும் அல்லது அவர்கள் சதைகள் உடைய மனிதர்களே அல்ல என்பதை போன்ற தோற்றம் வெளிப்பட்டது. அப்போது எப்படிபட்ட நிலைமை இருந்ததென்றால், முஸ்லிம்களின் நாலாபுறமும் ஈரானியர்களும், அரேபிய கிறித்தவர்களும் பரவியிருந்தனர். மேலும் மிகவும் ஆக்ரோஷமாக போர்புரிந்தனர். எனினும், முஸ்லிம்கள் எந்த உணர்வுடனும், உத்வேகத்துடனும் சண்டையிட்டு வந்தார்களோ அந்தநிலை கிறித்தவர்களிடம் இருக்கவில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் இரத்தம் குடிக்கும் சிங்கமாக மாறிவிட்டார். மேலும் வலுவான தாக்குதல்களை நடத்தி கிறித்தவர்களை புற்பூண்டுகளை போன்று வெட்டிக் கொண்டிருந்தார். ஈரானியர்களும் கூட முஸ்லிம்களை ஷஹீதாக்கிக் கொண்டும், காயங்களை ஏற்படுத்திக் கொண்டும் இருந்தனர். எனினும், மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே முஸ்லிம்கள் வீழ்ந்தனர். மேலும், காயமடைந்தவர்களும் கூட உத்வேகத்துடன் சண்டையிட்டு வந்தனர். ஈரானியர்கள் எந்த அளவிற்கு அதிகமாக மடிந்து கொண்டிருந்தனர் என்றால், அவர்களின் பிணங்களால் மைதானம் நிறைந்திருந்தது. மேலும், காயமடைந்தவர்களும் போர் மைதானத்திலிருந்து விலகிச் சென்றுவிட்டனர். முஸ்லிம்கள் எந்த அளவிற்கு கொலை செய்தார்கள் என்றால், அவர்களின் ஆடைகளில் இரத்தக் கறைகள் படிந்து உறைந்துவிட்டன. காலித் பின் வலீத் அவர்களின் ஆடையின் நிலையும் அப்படித்தான் இருந்தது. ஈரானியர்களின் இரத்தத்தால் பூமி குளிர்ந்துவிட்டது. ஏராளமான இரத்தம் தண்ணீரைப் போன்று பாய்ந்து ஓடியது. இறுதியில் ஈரானியர்களுக்கு தோல்வி ஏற்பட்டது. மேலும், மதியிழந்து ஓடிவிட்டனர். முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்றனர். ஒரு தொலைவு வரை அவர்களை கொலை செய்தவாறும், கைது செய்தவாறும் இருந்தனர். ஈரானியர்கள் எந்தஅளவிற்கு பித்துப் பிடித்ததைப்போன்று ஓடினர் என்றால் அவர்களின் ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் நதியில் விழுந்து, மூழ்கிவிட்டனர். ஈரானியர்கள் தொலைவில் சென்றுவிட்டபோதுதான் முஸ்லிம்கள் திரும்பி வந்தனர். இந்தப் போரில் எழுபதாயிரம் ஈரானியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் நூற்றி முப்பத்தி எட்டு முஸ்லிம்கள் ஷஹீதாகினர். எவ்வாறு இருப்பினும், முஸ்லிம்கள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் ஈரானியர்களை எப்படிக் கொன்றனர் என்று இந்த விஷயத்திலும் வரலாற்றாசிரியர்கள் ஆச்சரியம் அடைகின்றனர். (ஸாதிக் ஹுஸைன் சித்தீகி அவர்களின் நூல்- ஹஸ்ரத் காலித் பின் வலீத்(ரலி) பக்கம் 161-162)

ஒரு வரலாற்றாசிரியர் எழுதுகின்றார். அதிலிருந்து இந்த விஷயம் தெளிவாக தென்படுகிறது. அதாவது, காயமடைந்த போர் வீரர்கள் மூழ்கியதன் காரணமாகக் கூட நதி இரத்தத்தால் சிவப்பாக மாறி இருக்கலாம். எனவே, இதுபோன்ற சம்பவங்களில் ஓரளவு மிகைப்படுத்துதலுடன் செயல்பட்டவாறு சில கதைகளை சிலர் சேர்த்திருக்கலாம். அதன் காரணமாக இஸ்லாமியப் போர்கள் மீதும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் நல்லொழுக்கத்தின் மீதும் தாக்குதல் செய்யக் கூடியவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கின்றது. அல்லது போர்களில் முஸ்லிம்கள் காட்டுமிராண்டித் தனமாக செயல்பட்டார்கள் என பழிசுமத்தப்படுகின்றது. ஆனால், வெறும் பழி மட்டுமே சுமத்தப்பட்டுள்ளது (அது உண்மையல்ல) என்பது வெளிப்படையாக தெரிய வருகிறது.

எவ்வாறு இருப்பினும், எதிரி தோல்வியடைந்துவிட்டபோது அவனது படை சிதறுண்டுவிட்டது. முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்றுவிட்டு திரும்பி வந்துவிட்டனர். அப்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உணவிற்கு அருகில் நின்று கொண்டு கூறினார்கள்: இதனை நான் உங்களுக்கு தருகின்றேன். இது உங்களுடையதாகும். ஏனென்றால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் போர்களில், மைதானத்தை விட்டு விட்டு தப்பியோடக் கூடிய எதிரிகளால் தயாரான உணவைக் கண்டால், அதனை தமது படையினருக்கு பங்கிட்டுவிடுவார்கள்.

எனவே முஸ்லிம்கள் இரவு உணவாக அதனை உண்ணத் தொடங்கினர். உல்லைஸ் போரில் ஏற்கனவே கூறப்பட்டது போன்று, எதிரியின் எழுபதாயிரம் நபர்கள் மடிந்துபோயினர். (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 314, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

அம்கீய்ஷியாவின் வெற்றிக் குறித்து எழுதப்பட்டுள்ளது: அல்லாஹ் ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் யுத்தமின்றி அம்கீய்ஷியாவை வெற்றிக் கொள்ளச் செய்துவிட்டான். அம்கீய்ஷியா என்பது ஈராக்கில் உள்ள ஓரிடத்தின் பெயராகும். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உல்லைஸை வெற்றிக் கொண்ட பிறகு, அன்னார் (ரலி) அவர்கள் தயாரானார்கள். மேலும், அம்கீய்ஷியா வந்தார்கள். ஆனால், அன்னார் (ரலி) அவர்கள் வருவதற்கு முன்னரே அங்கிருந்த குடிமக்கள் விரைவாக ஊரை விட்டு ஓடிவிட்டனர். மேலும், ஸவாத் எனும்

ஊரில் சிதறுண்டுவிட்டனர். ஈராக்கில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் முஸ்லிம்கள் வெற்றிக் கொண்ட அந்த ஊர்களில் விளை நிலங்களின் பசுமையின் காரணமாக அவற்றிற்கு அஸவாத் என்ற பெயர் சூட்டப்பட்டது. அம்கீய்ஷியா ஹீராவிற்கு சமமான நகரமாக இருந்தது. உல்லைஸ் அந்த இடத்தின் இராணுவ முகாமாக இருந்தது. முஸ்லிம்களுக்கு அம்கீய்ஷியாவிலிருந்து எந்த அளவிற்கு போர் செல்வங்கள் கிடைத்தன என்றால், ஸாதுஸ் ஸலாஸிலிலிருந்து அதுவரை வேறு எந்தப் போரிலும் போர் செல்வங்கள் கிடைக்கவில்லை.

இந்தப் போரில் குதிரை சவாரி வீரர்களுக்கு ஆயிரத்தி நூறு தர்ஹம் பங்கு வழங்கப்பட்டது. போரில் சிறப்பாக செயல்பட்ட வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட செல்வங்களை தவிர்த்து கூடுதலாக இந்தப் பங்கும் கொடுக்கப்பட்டது. உல்லைஸ் மற்றும் அம்கீய்ஷியாவின் வெற்றியின் தகவலை, மிகவும் வீரமான வழிகாட்டி என்று பிரபலமடைந்திருந்த பனூ இஜ்ல் என்ற ஒரு நபரின் மூலம் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

அவர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றடைந்து உல்லைஸ் வெற்றியின் நற்செய்தி, போர் செல்வங்களின் அளவு,கும்ஸ் பங்காக கிடைத்த செல்வங்களின் விவரங்கள், மேலும் போரில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட பங்கு, ஆகிய அனைத்து விவகாரங்களையும், குறிப்பாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் வீரத்தின் சிறப்பான செயல்பாடுகளையும் மிகவும் அழகிய முறையில் எடுத்துரைத்தார். அவரின் துணிவு உறுதியான எண்ணம் மற்றும் வெற்றி செய்தியை எடுத்துரைக்கும் விதம் ஆகிய அனைத்தும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பிடித்துப்போனது. அதாவது, பிரதிநிதியாக அனுப்பப்பட்டவரின் வழிமுறை மற்றும் அவருடைய வீரத்தின் சம்பவங்கள், மற்றும் அவர் எடுத்துரைத்த விதம் ஆகியவற்றை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ரசித்தார்கள். உங்களது பெயர் என்ன? என்று அவரிடம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். எனது பெயர் ஜந்தல் என்று அவர் கூறினார். மிக சிறப்பு, ஜந்தல்! என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பின்னர், அந்தப் போர் செல்வங்களிலிருந்து ஓர் அடிமைப் பெண்ணை அவருக்கு கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். அந்த பெண்ணின் மூலம் அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது.

அதேபோன்று, அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: தற்போது, பெண்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) போன்ற மனிதரை ஈன்றெடுக்க முடியாது. (தாரீகுத் தபரீ தொகுதி 2, பக்கம் 314-315, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012) (ஹேகல் அவர்களின் நூல்:ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) அவர்கள், பக்கம் 312, இஸ்லாமி குதுப் கானா) (முஃஜமுல் பல்தான் தொகுதி 3, பக்கம் 309 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

மற்றவை எதிர்வரும் நாட்களில் இன்ஷா அல்லாஹ்.

தமிழாக்கம் :

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

### (மல்ஃபூஸாத்) முதல் பக்கத் தொடர்ச்சி

திருக்குர்ஆனின் விருப்பமும் இல்லை. ஒருபோதும் அதுபோன்ற வழிமுறைகள் நபித்துவத்தின் விருப்பத்திற்குரியதாகவும் இல்லை. சுருக்கமாக, இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, மனிதன் தூய மாறுதலை ஏற்படுத்திக் கொள்ளாத வரையிலும், மனதை தூய்மைபடுத்திக் கொள்ளாத வரையிலும் திருக்குர்ஆனின் ஞானங்கள் மற்றும் சிறப்புகளைப் பற்றிய தகவல் கிடைக்க முடியாது. ஆன்மாவின் தாகத்தை தணித்துவிடுகின்ற ஆழிய கருத்துகளும், தத்துவங்களும் திருக்குர்ஆனில் உள்ளன.

ஆன்மாவின் இன்பம் எந்த விஷயத்தில் உள்ளது? என்று உலகம் அறிந்திருந்தால், பின்னர் அது திருக்குர்ஆனில் மட்டுமே உள்ளது என்பதை கண்டறிந்திருக்கும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 385 காதியான் பதிப்பு 2018)

### (தஃப்ஸீரே கபீர்) முதல்பக்கத் தொடர்ச்சி

நிலைபெற்றிருக்கும். மக்கள் உடன்படிக்கைகளை முழுமை செய்யாவிட்டால் முதலில் நம்பிக்கையின்மையும், அதன் பிறகு தப்பெண்ணமும் உருவாகிவிடும். ஒரு நபரின் தீய செயலின் விளைவாக ஏனைய நூற்றுக்கணக்கான நபர்கள் சமுதாய அமைப்பின் நன்மைகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருந்துவிடுகின்றனர். எனவே, நம்பிக்கை நிலைபெற்றிருக்கவும், திருப்தியுடனும், ஆர்வத்துடனும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதற்காக தயாராக இருப்பதற்கும், சமுதாயம் முன்னேற்றம் அடைவதற்காகவும் என்ன ஆனாலும் தமது வாக்குறுதிகளை முழுமை செய்வதற்கு முழுமை செய்ய வேண்டும்.

தனிப்பட்ட உடன்படிக்கை மட்டுமின்றி சமுதாய உடன்படிக்கை ஒன்றும் உள்ளது. அதாவது, மனிதர்கள் சமுதாய முன்னேற்றத்திற்காக கிலாஃபத் என்றழைக்கப்படும் ஒரு நபரின் கையில் மக்கள் உடன்படிக்கை செய்கின்றனர். இந்த உடன்படிக்கையும் அதற்குள் இணைந்திருக்கின்றது. இந்த வசனத்தில் அதன் பக்கமே சைகை காணப்படுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ் உங்களுக்கு ஒரு ஜமாஅத்தை உருவாக்கியுள்ளான். ஒரு அமைப்பை நிலை நாட்டியுள்ளான். மேலும், அந்த அமைப்பை பின்பற்றுவதாக நீங்கள் சத்தியங்கள் செய்துள்ளீர்கள். இனி நீங்கள் அதனை பேணி வாருங்கள். இல்லையென்றால் அதன் விளைவாக உங்களது தியாகங்களால் இஸ்லாத்தின் மீது உருவாகியுள்ள மதிப்பச்சம் நீங்கிவிடும். பின்னர் முதலிலிருந்து உழைக்க நேரிடும். இதில் ஒரு மிகப் பெரிய அரசியல் கருத்து உள்ளது. சில நபர்களின் பிரிவினையால் முழு அமைப்பும் அழிந்துவிடுகின்றது. சமுதாயத்தின் உழைப்பு வீணாகிவிடுகின்றது. மேலும், புத்தம் புதிதாக உழைப்பு மற்றும் தியாகம் செய்வதற்கு அவசியம் ஏற்படுகிறது. ஆனால், உடைந்த பொருள் மீண்டும் புதியப் பொருளைப் போன்று இணைவதில்லை. உடைந்த உள்ளம், இதற்கு முன் எப்போதும் இணைந்திருந்ததைப் போன்று இணைய முடியாது. எனவே அந்த உடன்படிக்கையை நிலைநாட்டுவதற்காக மிகவும் கடுமையாக முயற்சி செய்வது அவசியமாகும்.

இதில் அந்நிய சமுதாயத்துடனான உடன்படிக்கைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் இந்த வசனத்தின் சொற்களிலிருந்து தெரிய வருகிறது. இந்தக் கருத்தின் அடிப்படையில் இந்த வசனத்தை ஒரு நிரந்தர கருத்தாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதாவது لَا تَكُوْنُوْا என்பதிலிருந்து ஒரு புதிய கருத்து ஆரம்பமாகிவிடுகிறது. அதன் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, எவ்வாறு அல்லாஹ்வுடனான உடன்படிக்கை மற்றும் தங்களுக்கிடையிலான பரஸ்பர உடன்படிக்கையை பேணுவது அவசியமோ அதேபோன்று மற்ற சமுதாயங்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை பேணுவதும் அவசியமாகும். அந்த உடன்படிக்கைகளை கண்காணித்து வாருங்கள். இல்லையென்றால், உலகத்தின் அமைதி சீரழிந்துவிடும். எனவே, دَخَلًا என்ற சொல்லும் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது.

كَالَّتِيْ نَقَضَتْ غَزْلَهَا مِنْۢ بَعْدِ قُوَّةٍ

என்பதன் பொருளும் அமைதியை நிலைநாட்டிய பிறகு, குழப்பத்தின் நிலையை உருவாக்காதீர்கள் என்பதாகும்.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 4, பக்கம் 229 காதியான் பதிப்பு 2010)

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த TOLL FREE எண்ணில்

ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

★ அரசாங்கம் தடுப்பூசி போடுகிறது என்றால், போட்டுக் கொள்ள வேண்டும். எந்த தவறும் இல்லை.

★ இதுவரை நான் ஆய்வு செய்தேன். மேலும் இந்தத் துறையில் வல்லுநர்களான பல அஹ்மதிகளின் மூலம் ஆராய்ச்சி செய்துள்ளேன். தடுப்பூசி எடுத்துக் கொள்வதால் எந்த தவறும் இல்லை என்றே அமெரிக்கா முதல் இங்கு வரை அனைவரின் எண்ணமாகும் என்பது அவர்கள் மூலம் அறிந்து கொண்டுள்ளோம்.

★ நேர்மையான, நல்ல விஷயங்களை பேசக் கூடிய,படிப்பை பற்றி பேசக் கூடிய, நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

★ உங்களுக்கு கோபம் வந்தால், குளிர்ந்த நீரைப் பருகிக் கொள்ளுங்கள். மேலும், அமர்ந்துவிடுங்கள். அல்லாஹ் உங்களது கோபத்தை அகற்றுவதற்காக அவனிடம் துஆ செய்யுங்கள். உங்களுக்கு கோபம் வந்தால், அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கத் துவங்கிவிடுங்கள்.

## அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் ஜெர்மனியில் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் ஆன்லைன் சந்திப்பு:

மஜ்லிஸ் அத்ஃபலுல் அஹ்மதிய்யா ஜெர்மனியின் உறுப்பினர்களுக்கு தமது அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை ஆன்லைனில் சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்தது. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், (டில்ஃபோர்ட்) இஸ்லாமாபாத்தில் உள்ள தமது அலுவலகத்தில் அமர்ந்திருந்தார்கள். அதேநேரம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட திஃப்ல்கள் (Maimarkclub)mannheim-லிருந்து ஆன்லைன் சந்திப்பில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. அதன் பிறகு மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களுக்கு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் நேரடியாக சில கேள்விகளை கேட்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஜெர்மனி குத்தாமுல் அஹ்மதிய்யாவுடனான கடந்த ஆன்லைன் சந்திப்பின்போது, மழை பொழிந்து கொண்டிருந்தது. எனவே அது தொடர்பாக ஹுஸுர்(அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இந்த திஃபில்கள் இன்று ஹாலில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். குத்தாமுடன் உங்களுக்கு மழையின் ஓர் அனுபவம் ஏற்பட்டுள்ளது. இவர்களும் மாஷாஅல்லாஹ் முஜாஹித்கள் தான். இன்றைய நாட்களில் (ஜுமுஆ குத்பாக்களில்) பத்ரி சஹாபிகளைப் பற்றி கூறப்பட்டு வருகிறது. அங்கு புயலும் வந்திருக்கும். மழையும் வந்திருக்கும். ஆனால், அவர்கள் 13,14 வயது சிறுவர்களாக இருந்தனர். எனவே கவலைப்படாதீர்கள். நமது இந்த திஃப்ல்கள் அனைவருமே மாஷாஅல்லாஹ் முஜாஹித்கள் ஆவர். ஆனால், நல்லது நடந்துள்ளது. அவர்கள் (அறையின்) உள்ளே அமர்த்தப்பட்டுள்ளார்கள். அதற்காக, மழையில் சென்று அமருங்கள் என்பது பொருள் அல்ல.

அன்பிற்குரிய ஹுஸுர்! ஜெர்மனியில் 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கொரானா தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதை போட்டுக் கொள்ள வேண்டும் என்று சில வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால், அதற்கு அவசியமில்லை என்று சிலர் கூறுகின்றனர். ஹுஸுர்! இது தொடர்பாக தங்களின் வழிகாட்டல் என்ன உள்ளது? என்று ஒரு திஃப்ல் கேட்டார்.

ஹுஸுர்(அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: அரசாங்கம் தடுப்பூசி போடுகிறது என்றால் போட்டுக் கொள்ள வேண்டும். எந்த தவறும் இல்லை. என்ன தவறு இருக்கிறது? அது protection(பாதுகாப்பு) தானே? இதுவரை நான் செய்த ஆய்விலிருந்து அல்லது நடத்திய ஆய்விலிருந்து தவறில்லை என்றே தெரிய வந்துள்ளது. மேலும் இந்தத் துறையில் வல்லுநர்களான பல அஹ்மதிகளின் மூலம் ஆய்வு நடத்தியுள்ளேன். தடுப்பூசி எடுத்துக் கொள்வதால் எந்த தவறும் இல்லை என்பதே அமெரிக்கா முதல் இங்கிருக்கும் நபர்கள் வரை அனைவரின் எண்ணமாகும்.

மேலும், மில்லியன்களில் ஒருவரே இன்ன இன்ன பாதிப்புகள் உள்ளன என்று கூறுகின்றார். risk-எல்லா இடங்களிலுமே உள்ளது. எனவே தடுப்பூசி எடுத்துக் கொள்வதால் எந்த தவறும் இல்லை என்பது எனது எண்ணமாகும்.

➢ அன்பிற்குரிய ஹுஸுர்(அய்யதஹுல்லாஹ்)! புதிதாக பிறக்கக் கூடிய குழந்தைகளுக்கு தாங்கள் எப்படி பெயரை தேர்ந்தெடுக்கின்றீர்கள்? என்று ஒரு திஃப்ல் கேட்டார்.

ஹுஸுர்(அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: இறைவன் என்னை இந்த பதவியில் அமர்த்தியபோது, நான் பார்த்தேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ்(ரஹி) அவர்கள் ஒரு கோப்பை உருவாக்கியிருந்தார்கள். அதில் பிள்ளைகளின் பெயர்கள் இருந்தன. அவற்றிலிருந்து அன்னார் செலக்ட் செய்து வந்தார்கள். அதிலிருந்து பெயர்களை தேர்ந்தெடுத்து பிள்ளைகளுக்கு அனுப்பி வந்தார்கள். பின்னர், நானும் அதனை தொடர்ந்து வருகிறேன். அதில் மேலும் கூடுதலான பெயர்களை சேர்த்துள்ளேன். அதனை கூடுதலாக update செய்துள்ளேன். சில புதுப் புதுப் பெயர்களும் எனது நினைவில் வந்தன. அதனையும் இடையில் வைத்து ஒரு கோப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நான் நேரடியாக பெயர் வைக்கும்போது, அந்த கோப்பைப் பார்த்து பின்னர் குழந்தைகளுக்கு பெயர் வைக்கின்றேன். கூறுகின்றேன். தாய், தந்தையின் பெயர்களோடு இணைந்த பெயர்களை வைப்பதற்கே முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால், சில முறை வேறு பெயர்களும் வைக்கப்படுகின்றன.

பின்னர், உனக்கு யார் பெயர் வைத்தார்கள்? என்று அந்த திஃப்லிடம் ஹுஸுர்(அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, ஹுஸுர் அன்வர் என்று அந்த சிறுவன் கூறினான். பின்னர் ஜாஸிப் என்பதற்கு என்ன பொருள்? என்று ஹுஸுர் அன்வர் அவர்கள் அவனிடம் கேட்டார்கள். அதற்கு, ஈர்க்கக் கூடியவர் என்று அந்த சிறுவன் கூறினான். ஆம். absorb செய்யக் கூடியவர். எனவே அல்லாஹ்வின் அன்பை ஈர்த்துக் கொள். அல்லாஹ்வின் தூதரின் நேசத்தை ஈர்த்துக் கொள். நன்மைகளை செய்து வாருங்கள். அப்போது தான் உனது பெயர் சரியானதாக அறிய வரும் என்று ஹுஸுர் கூறினார்கள்.

➢ அல்லாஹ்வை வணங்குவதன் நோக்கத்தைக் குறித்து ஹுஸுர்(அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் ஒரு திஃப்ல் கேட்டார்.

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: தன்னை மனிதன் வணங்கவேண்டும் என்பதற்காவே அவனை அல்லாஹ் படைத்தான். அத்துடன் இறை வணக்கத்திற்குரிய வழிமுறைகளையும் அல்லாஹ் உங்களுக்கு கூறியுள்ளான். நான் உங்களை அனைத்து பண்புகளுடன் படைத்துள்ளேன். நான் படைத்த படைப்பினங்களில் மிகவும் கண்ணியமான, மிகவும் சிறந்த படைப்பினமாக மனிதனை படைத்துள்ளேன் என்றும் அவன் கூறியுள்ளான். பின்னர், அல்லாஹ் மனிதனுக்கு அறிவை வழங்கியுள்ளான். மூளையை வழங்கியுள்ளான். சிந்தனையை

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 25 August 2022 Issue No. 34

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வழங்கியுள்ளான். அதன் மூலம் அவன் புது, புது கண்டுபிடிப்புகளை கண்டறிய முடியும்.

எனவே அல்லாஹ் கூறுகிறான். அதாவது, நான் உங்களை மிகவும் சிறந்தவராக படைத்துள்ளபோது எனக்கு நன்றியும் செலுத்துங்கள். நன்றி செலுத்துவதற்கான வழிமுறையையும் அல்லாஹ் கூறிவிட்டான்.

அதாவது, நீங்கள் என்னை வணங்குங்கள். நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ் பல்வேறு நபிமார்களை அனுப்பியுள்ளான். எல்லா காலங்களிலும் இறை வணக்கத்திற்கான பல்வேறு வழிமுறைகள் அவர்களிடம் இருந்தன. ஹஸ்ரத் நபிநாயகம் (ஸல்) அவர்களை அனுப்பியபோது, அல்லாஹ் அன்னார் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு தொழுகைகளுக்கான கட்டளையை வழங்கினான். நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக ஆகுவதற்கு, ஐவேளை தொழுகைகளை நம் மீது கடமையாக்கிவிட்டான்.

நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக ஆகிவிட்டால், அல்லாஹ் கூறுகின்றான்: ஒன்று, நான் உங்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்கியிருந்தேன். மேலும், ஒரு அழகிய மனிதனாக படைத்துள்ளேன். மேலும், எனது படைப்பினங்களில் மிகச் சிறந்த படைப்பாக படைத்துள்ளேன். அதற்கு, நன்றி கூறும் விதமாக எனக்கு இறை வணக்கம் செய்யும்போதும் எனது கட்டளைகளை ஏற்றுக் கொண்டால் பின்னர் நான் உங்கள் மீது மேலும் அருள் செய்வேன். இன்னும் உங்களுக்கு வழங்குவேன். அல்லாஹ் மற்றவர்களுக்கும் வழங்குகின்றான். மற்ற மக்களும் உழைக்கும்போதும், பணி செய்யும்போதும் அவர்கள் அல்லாஹ்வை வணங்காவிட்டாலும் அவர்களுக்கும் அல்லாஹ் வழங்குகின்றான். ஆனால், உண்மையான அல்லாஹ்வை நம்பக் கூடிய ஒரு அஹ்மதி முஸ்லிமிற்கு, ஒரு உண்மையான முஸ்லிமிற்கு இறை வணக்கத்திற்கான reward-ம் வழங்குகின்றான். உலகப் பொருட்களையும் அவருக்கு அதிகரிக்கின்றான். அவருக்கு மார்க்கத்திலும், ஆன்மீகத்திலும் முன்னேறத்தை வழங்குகின்றான். இறை வணக்கத்தின் காரணமாக பின்னர்,அல்லாஹ் தன்னுடனான தொடர்பிலும் அவருக்கு முன்னேற்றத்தை வழங்குகின்றான். பின்னர், அவருக்கு அல்லாஹ்வுடன் ஒரு சிறப்பான தொடர்பும், அன்பும் உருவாகிவிடுகிறது. மேலும் ஒவ்வொரு விஷயத்தையும் அல்லாஹ் கூறுவதற்கேற்ப செய்கின்றார். பின்னர், இதையும் தாண்டி அல்லாஹ் கூறுகின்றான்: இந்த உலக வாழ்க்கை என்பது தற்காலிக வாழ்க்கை ஆகும். நீங்கள் அதிகபட்சமாக 70,80,90 வயது வரை உயிர் வாழலாம் (அவ்வளவுதான்). அதன் பிறகு, நிரந்தரமான வாழ்வைக் கொண்ட (மறுமையில்), அங்கும் இறை வணக்கத்திற்கான reward-மீண்டும் வழங்குவேன். எனவே, அல்லாஹ் இறை வணக்கம் செய்யும் ஒரு நல்ல மனிதனுக்கு இந்த உலகத்திலும் அருளுகின்றான். அனைத்தையும் வழங்குகின்றான். நன்றி செலுத்தியதன் காரணமாகவும், இறை வணக்கம் செய்ததன் காரணமாகவும் அவருக்கு மீண்டும் மறுவுலகிலும் அருளுகின்றான். ஆனால், அதேநேரம் (நிராகரிப்பாளர்களாகிய) மற்றவர்களுக்கு எதுவும் கிடைக்காது. எனவே நாம் அல்லாஹ்வை வணங்குகின்றோம்.

தொடரும்...

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)


A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியா, காதியான்)

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?
உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.
நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.
KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL
97348 44732

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad